விலை ரூபா 1-00

# ஈழநாடு
THE EELANADU

மலர் 24 சித்திரை 14 றஜப் 2 இதழ் 73

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 27—4—82

## "தமிழினத்தைப் பிரிக்கும் முயற்சி தந்தை செல்வாவின் ஆத்மா சாந்திபெறத் தடையாகும்"

--அமிர்

(யாழ்ப்பாணம்)

"தமிழினத்தின் ஒற்றுமையைக் குலைக்கும் சக்திகள் இன்று நடத்தியிருக்கும் நாடகம், எந்தத் தமிழனுக்கும் மகிழ்ச்சியைக் கொடுக்காது. தந்தை செல்வாவின் ஆத்மாவுக்குக்கூட சாந்தியமளிக்காது. சிங்கள ஏகாதிபத்தியத்துக்குத்தான் மகிழ்ச்சியைத்தரும்."

இவ்வாறு நேற்றுமாலை தந்தைசெல்வா நினைவாலயத்தில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணிச்செயலாளர் நாயகமுமான திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில் தெரிவித்தார்.

அஞ்சலிக் கூட்டத்துக்கு தந்தை செல்வா அறங்காவல் குழுத்தலைவர் திரு. கு. நேசையா தலைமைவகித்தார்.

திரு. அ. அமிர்தலிங்கம் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

"தமிழினத்திற்கு ஏற்படும் துன்பங்களை தடுத்து நிறுத்த

(8ம் பக்கம் பார்க்க)

# தேர்தல் நடப்பது சந்தேகம்: ரத்துச் செய்யவும் யோசனை?

## செய்தியாளர் மாநாட்டில் சிறிமாவோ அச்சம்

(கொழும்பு)

"பொதுத்தேர்தல் விரைவில் நடப்பது சாத்தியமில்லை. அப்படித்தான் தேர்தல் நடந்தாலும் நீதியாக நடைபெறும் என்று எதிர்பார்க்க முடியாது" என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா கருத்துவெளியிட்டுள்ளார்.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நேற்றுக்காலை, ரோஸ்மிட்பிளேஸிலுள்ள அவரது இல்லத்தில் நடத்திய செய்தியாளர்கள் மகாநாட்டில்தான் இக் கருத்தை வலியுறுத்தியுள்ளார்.

"பொதுத் தேர்தல் விரைவில் நடைபெறப் போகிறது என்று பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. ஐக்கிய தேசியக் கட்சியும் இதற்கான ஆயத்தங்களைச் செய்து வருவதாகக் கூறப்படுகிறது. ஆனால் தேர்தல் ஆணையாளர் இல்லாத நேரத்தில் பொதுத் தேர்தல் நடப்பது சந்தேகம்தான். நடந்தாலும் அது நியாயமான தேர்தலாக இருக்கமாட்டாது" என்று தெரிவித்ததிருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா மேலும் கூறியதாவது:

"தேர்தல் ஆணையாளர் இல்லாவிட்டால், தேர்தல் ஆணையாளர் திணைக்களத்தில் இருந்துதான் பதில் தேர்தல் ஆணையாளர் நியமிக்கப்பட வேண்டும். ஆனால் இப்பொழுது ஜனாதிபதி மாளிகையிலிருந்துதான் பதில் தேர்தல் ஆணையாளர் இயங்குகிறார். இந்த நிலையில்தான் தேர்தல் பற்றி சந்தேகிக்கவேண்டியிருக்கிறது.

"மக்கள் விடுதலை முன்னணி பற்றிப் பல செய்திகள் வெளிவருகின்றன. இந்தப் பதட்ட நிலையைக் காட்டி, தேர்தலை இல்லாமற் செய்யலாம். தேர்தலை ரத்துச் செய்யவும் அரசாங்கம் ஆலோசிக்கிறதாம்.

"கடந்த பொதுத் தேர்தலில் மக்கள் எனக்குத் தண்டனை தந்தார்கள். நானும் உண்மையை உணர்ந்துவிட்டேன். இரண்டாவது தண்டனையாக ஜனாதிபதி ஆணைக்குழு வைத்து எனது உரிமைகளைப் பறித்தார்கள். இப்பொழுது மூன்றாவது தண்டனையாக, தேர்தலை நடத்தாமல் அல்லது தேர்தலை நீதியற்றமுறையில் நடத்த அரசு திட்டமிடுகிறது" என்று கூறினார். (ம)

## போக்லண்ட்தீவுகள் பிரச்னை: தென் ஜோர்ஜியாவில் கடும் யுத்தம்!

லண்டன் ஏப் 26

போக்லண்ட் தீவுகளிலுள்ள தென் ஜோர்ஜியாவை பிரிட்டன் மீண்டும் கைப்பற்றியதைத் தொடர்ந்து அங்கு பிரிட்டிஷ் துருப்புக்களுக்கும் ஆர்ஜென்டீனா துருப்புக்களுக்குமிடையே கடும் யுத்தம் நடைபெற்றுவருவதாக அறிவிக்கப்பட்டது

ஆரம்பத்தில் தென்ஜோர்ஜியாவில் பிரிட்டிஷ் துருப்புக்கள் அதிகமாக காணப்பட்டதாலேயே அவர்களால் அதனை கைப்பற்ற முடிந்ததென்று ஆர்ஜென்டீனா தெரிவித்துள்ளது.

தென்ஜோர்ஜியாவின் உள்நாட்டிற்குள் சென்று ஆர்ஜென்டீனா துருப்புக்கள் தாக்குதலை மேற்கொண்டு வருவதாக மூன்று உறுப்பினர்களைக் கொண்ட ஆர்ஜென்டீனாவின் இராணுவ அதிகாரசபை தெரிவித்துள்ளது.

போக்லண்ட்தீவுகள் பிரச்னைக்கு சமரசப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாணவே தொடர்ந்தும் பிரிட்டன் விரும்புவதாக தெரிவித்துள்ளது.

இந்நெருக்கடி நிலைமை பற்றி ஆராய அமெரிக்க நாடுகள் ஸ்தாபனம் இன்று வாஷிங்டனில் கூட்டமொன்றை நடத்தவுள்ளதாகக் கூறப்பட்டது. (வெ)

## பதில்மனு தாக்கல்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைமை அலுவலகம் தொடர்பாக திரு. பண்டாரயக்கா குழுவினர் நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்திருந்த மனுவை ஆட்சேபித்து பொலிசாரும், வேறு சிலரும பதில் மனுதாக்கல் செய்துள்ளனர்.

அநுராபண்டாரநாயக்கா குழுவினரின் மனுவுக்கு இரு காரணங்களை எடுத்துக்காட்டி பிரதிசொலிஸ்டர் ஜெனரல் திரு, சுனில் டி சில்வா ஆட்சேபம் தெரிவித்திருந்தார்.

இவரின் ஆட்சேபனையை ஏற்றுக்கொண்ட மாளிகாவத்தை நீதவான் இரண்டு பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு சத்தியக்கடதாசிகளைத் தாக்கல் செய்ய அனுமதி வழங்கி விசாரணையை அடுத்த மாதம் 5-ம் திகதிக்கு ஒத்திவைத்தார். [வெ]

## தந்தை செல்வா நினைவாலயத்தில் தமிழீழப் பிரகடனம்!

### தமிழீழ விடுதலை அணி திடீர் நடவடிக்கை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்திலுள்ள தந்தை செல்வா நினைவாலயத்தில் தமிழர் விடுதலைக்கூட்டணி எம். பி.க்கள், யாழ். மாவட்டசபை, யாழ். மாநகர சபை உறுப்பினர்கள் நேற்று மாலை 6–05 மணிக்கு எழுந்து நிற்க, திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் "வாழ்க ஈழத் தமிழகம்" என்ற பாடலைப் பாடிக் கொண்டிருக்க; 30 அடி தூரத்தில் அமைக்கப்பட்டிருந்த பந்தலில் தமிழீழ விடுதலை அணியினர் குழுமியிருந்து கோவை மகேசன் ஐ. நா. சபை முன் பிரகடனம் செய்யப்பட்ட தமிழீழப் பிரகடனத்தை தமிழில்படித்து அதை ஏற்றுக்கொள்வதாக, தமிழீழ விடுதலை அணியினர் கையெழுத்திட்டனர்.

தந்தை செல்வா நினைவாலயத்தில் அமைக்கப்பட்ட பந்தலில் தமிழீழ விடுதலை அணியினர் பிற்பகல் 4 மணிக்குக்கூடினர். டாக்டர் ஏ. எஸ். தர்மலிங்கம், திரு கோவை மகேசன், திரு ஈழவேந்தன், திரு. இராசநாயகம், மற்றும் மாணவர் பலரும் குழுமியிருந்தனர். வீதியில் மக்கள் கூடியிருந்தனர்.

சரியாக 5-20 மணிக்கு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், திருமதி அமிர்தலிங்கம் அவ்விடத்திற்கு வந்துசேர்ந்தபோது மக்களிடையே பரபரப்பு ஏற்பட்டது. சுமார் 10 நிமிடம் திரு. அமிர்தலிங்கம் வீதியருகில் நின்று கொண்டிருந்தார். அதேநேரம் தந்தை செல்வா நினைவாலயப் பந்தலில் தமிழீழ விடுதலை அணியினர் பக்திப் பாடல்கள் பாடிக்கொண்டிருந்தனர்.

மாணவர்கள் 29ம் திகதி ஹர்த்தால் தொடர்பான துண்டுப்பிரசுரங்களை வீதியில் விநியோகித்ததுடன், உண்டியலில் நிதியும் சேர்த்தார்கள்.

சிறிதுநேரத்தில், கோப்பாய் எம். பி. திரு. எம். ஆலாலசுந்தரம், ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் வந்துசேர்ந்தனர். இவர்களுக்கு இளைஞர்கள் ஹர்த்தால் பற்றிய துண்டுப் பிரசுரங்களை கொடுத்தார்கள். யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரனும் வந்துசேர்ந்தார்.

மானிப்பாய் எம். பி. திரு. தர்மலிங்கம், யாழ் மாவட்ட சபைத் தலைவர் திரு. சு. நடராசா, யாழ். முதல்வர் திரு ஆர். விசுவநாதன், மாவை சேனாதிராசா, மாவட்டசபை உறுப்பினர்களான திரு. தம்பிமுத்து, திரு. இராசேந்திரன், திரு. சின்னத்துரை, யாழ் மாவட்ட சபை உபதலைவர் திரு. சி. நாகராசா, மாநகரசபை உறுப்பினர்கள் திரு. தம்புகந்தையா, திரு. என். ரி. செல்லத்துரை,

(8ம் பக்கம் பார்க்க)

## "ஜனநாயக கோட்பாட்டில் இலங்கை நம்பிக்கை"

### பிரதமர் 'பிரேமா' கருத்து

(கொழும்பு)

"இலங்கை ஜனநாயக கோட்பாடுகளில் அசையாத நம்பிக்கைகொண்டுள்ளது. 1978ம் ஆண்டு அரசியலமைப்பில் சமயத்திற்கு உரிய இடமளிக்கப்பட்டுள்ளது. முக்கியமான மதங்கள் யாவும் ஆசியாவில் தோன்றியுள்ளன."

மேற்கண்டவாறு பிரதம மந்திரி திரு. ஆர். பிரேமதாசா உலக இந்து மகாநாட்டின் இறுதிநாள் நிகழ்ச்சியில்கலந்து கொண்டு உரையாற்றுகையில் கூறினார்

சர்வதேச இந்துமத ஆராய்ச்சிநிலையம் அமைக்கவேண்டுமென்ற பிரேரணையும் நிறைவேற்றப்பட்டது.

இந்நிலையத்தை அமைப்பதற்கான பொருத்தமான காணித்துண்டை வழங்க ஜனாதிபதி உறுதியளித்துள்ளதாக அமைச்சர் திரு. செ. இராசதுரை தெரிவித்தார். (வெ)

## கண் சிகிச்சை ஒத்திவைப்பு

[யாழ்ப்பாணம்]

சாவகச்சேரி லயன்ஸ் கழகம் இம் மாதம 28ம் திகதி சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் ஏற்பாடு செய்திருந்த இலவச கண்சிகிச்சை, நிபுணர்களின் வருகை தாமதம் காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இலவச மூக்குக்கண்ணாடிக்கு விண்ணப்பித்தவர்களுக்கு பிறிதொரு தினத்தில் மூக்குக் கண்ணாடி வழங்கப்படும் என்று சாவகச்சேரிலயன்ஸ்கழகம்அறிவித்துள்ளது (சொ)

### மணிவாக்கு

ஒருவனின் பண்பாட்டை மரத்துக்கு ஒப்பிடலாம். புகழ் அதன் நிழலாகும். ஆனுல் நிழலைப்பற்றித்தான் நாம எண்ணிக் கொண்டிருக்கிறேம். மரமே உண்மையானது!

—ஏப்ரகாம் லிங்கன்

# நமது நோக்கு

## சீரான உடம்பு; சிரசு காலி

''எந்தக் கல்லூரியிலிருந்து வருகிறீர்?''.

''நான் விக்டோறியாக் கல்லூரியிலிருந்து வருகிறேன்''.

'அது எங்கே இருக்கிறது?''

''அது சுழிபுரத்தில் இருக்கிறது.''

''நாங்கள் கேள்விப்படாத பள்ளிக்கூடமும் ஊருமாக இருக்கிறதே!''

யாழ்ப்பாண மாவட்டத்தில் தொன்மை வாய்ந்த சுழிபுரத்தில் மிகப்பழமை மிக்க விக்டோறியாக்கல்லூரியிலிருந்து இலங்கைப் பல்கலைக்கழகம் புகுந்த இன்றைய எதிர்க்கட்சித் தலைவரான திரு.அ.அமிர்தலிங்கத்துக்கும் மற்றைய பல்கலைக்கழக மாணவர்களுக்குமிடையே நடந்த சம்பாஷணை இது.

தான் படித்த கல்லூரியைத் தகப்பனுகக் கொண்டால், திரு. அமிர்தலிங்கத்தின் வாழ்க்கை வரலாறு தமிழ் முனிவரின் 'தந்தை மகற்காற்றும் நன்றி'யும், 'மகன் தந்தைக்காற்றும் உதவியும்' இன்று பூர்த்தியாகிவிட்டனவென்று கொள்ளலாம்.

ஆனுல் நாம் எடுத்துக் கொண்ட விடயம் வேறு:

1945இல் விக்டோறியாக் கல்லூரி பிரபல்யம் பெறவில்லை. இதனை திரு. அமிர்தலிங்கம் கல்லூரி பரிசளிப்பு விழாவில்குறிப்பிட்டிருக்கிறர்.

மாற்று சமுதாயத்தினர் மத்தியில் மட்டுமல்ல; யாழ்ப்பாணத்திலேயே கல்லூரி பிரபல்யம்பெறவேண்டியஅளவிற்குப் பெறவில்லையெனலாம்.

காரணம் என்ன? அக்காலத்தில்–ஏன் இக்காலத்திலும் கூட–ஒரு சிரேட்ட கல்லூரியின் பெருமைக்கு இன்றியமையாதது படிப்பிலும் பார்க்க விளையாட்டு வீரம்; கிளித்தட்டு போன்ற விளையாட்டுகள் அல்ல; கிரிக்கட்,உதைபந்து, ஹொக்கி, றகர், டெனிஸ் போன்றமேனுட்டு குழுவினர் விளையாட்டுகளும் (Team Games)மெய்வலலுநர் விளையாட்டுகளும் தரம் வாய்ந்த அளவில் பிரபலம் பெருத கல்லூரிகள், கல்லூரிகளென மதிக்கப்படாத காலம் அது: படிப்பின் திறமை என்னவாயுமிருக்கலாம்.

இந்தக்கொள்கை இங்கிலாந்தில் பிரபலம் பெற்ற ஈற்றன், ஹாரோ போன்ற பிரபல சிரேட்ட பாடசாலைகளில்ஆட்சிபெற்றிருந்தது; இங்கிலாந்தின் குடியேற்ற நாடுகளுக்கு இது இறக்குமதி செய்யப்பட்டது.இலங்கையின் றேயல், சென். தொமஸ், சென் ஜோசெப் கல்லூரிகள் இந்த அமைப்பில் உருவானவை; இது யாழ்ப்பாணத்திலும் தொற்றுநோய்போல் பரவியது.

இவ்வித கல்லூரிகளில் சிறந்த ஆசிரியர்கள் கல்வி புகட்டவில்லையென்பதல்ல; அவ்வித வகுப்பறைப் படிப்புக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதில்லையென்பதே! விளையாட்டு வீரமே புருஷ லட்சணம் என்று கொள்ளப்பட்ட கருத்து பிரிட்டனிலிருந்து தீவிரமாகப் இங்கு பரவியகாலம்,

படிப்பில் திறமையும் அக்கறையும் காட்டும் மாணவர்கள் விளையாட்டுக்குதவாதென்றும்; விளையாட்டு வீரர் விசேட பயிற்சி பெற்று கல்லூரின் பெருமையை நாடறியச் செய்வார்களென்றும். அத்தகைய விளையாட்டு வீரர்களே நாட்டின் ஏன் ஏகாதிபத்தியத்தின் பெரும் பதவிகளுக்கு தகுதியுடையவர்களென்றும் கருதப்பட்டது.

கல்வியில் விவேகி வேருென்றிலும் திறமையற்றவன் என்றும்; விளையாட்டுத்துறையில் பெருமை பெற்றவன் வேறெந்தத்துறைக்கும் உரியவன் அல்ல என்றும் தவருக நம்பிவந்த மரபு இன்னும் இந்த நாட்டை விட்டகலவில்லை. அவ்வளவிற்கு இது சுதந்திர நாடல்ல.

சிற்பக்கலையில் திறமை பெற்றவன் நிலையென்ன? சிந்தனைத் திறனும் செயலாற்றலும் ஒருங்கே காண முடியாதா? சிந்தனைத்திறன் சாமானியமானதா? அதற்கு விளையாட்டு வீரம் இன்றியமையாததா?

காலத்துக்காலம் மாறி மாறிவரும் அமைச்சர்கள் மட்டுமல்ல ஆட்சிகளே கல்விக்கொள்கையில் நேர் மாருன மாற்றங்களை ஆழ்ந்த சிந்தனையின்றி நடை முறைப்படுத்துகின்றன என்பதை எதிர்க்கட்சித்தலைவர் ஒத்துக்கொள்வாரென நம்புகின்ருேம்.

நாட்டில் அமைதியான, ஆழமான ஆக்க பூர்வமான கல்விச் சேவையில் ஈடுபட்டிருக்கும் கிராம பாடசாலைகள் அரசினதோ, அல்லது தலைவர்களினதோ கவனத்தை ஈர்ப்பதில்லை, நாட்டின் பெருந்தலைவர்களையே. ஆரம்ப நிலையில் அவர்களின் கல்விக்குத் தக்க அத்திபாரம் அளித்த கல்விக் கூடங்கள்வேண்டாப்பண்டமாகக் கருதப்படுகின்றன. இந்தப் பிாபுத்துவம் தேசிய கல்வியின் சத்துராதியென்பதை உணர்க.

நகரத்தில் போலிக்கௌரவம் பெற்று விளங்கும் டாம்பீகமான கல்லூரிகள் விளையாட்டை ஊக்குவித்து மாணவர்களின் உடம்பைச் சீராக்கும் பணியில் சிரசு காலியாகவிருந்தால் பரவாயில்லை என்ற பாணியில் நடைபெறுகின்றன. கிரிக்கட் மனோபலத்தை விருத்தி செய்யுமென்பது விடுகதை.

இக்கல்லூரிகளுக்கு பழைய மாணவர்களென விஜயஞ்செய்யும்வீ. ஐ. பீ. கள் பிரதம அதிதிகள் தாங்கள் விளையாடிய கிரிக்கட்டை நினைவுகூருவது வழக்கம்; ஆனுல் நாட்டின் முன்னேற்றத்திற்கு சிரசே பிரதானம்! சிரசின் விருத்தியைக்கொண்டு பாடசாலைக்கு மதிப்பளிக்குக!

பல்கலைக்கழகங்களில் நெருக்கடி

# பண்டைய ஆசிரிய மாணவ உறவுமுறை

### தகுதிப் புறம்பு

மாணவர்கள் தங்கியிருந்து கற்கக்கூடிய வகையிற் பல்கலைக்கழகத்தை அமைத்தவர்கள் அவ்வாறு கற்பது ஆசிரிய–மாணவர்கள் உறவு வளர்வதற்கான சூழ்நிலையை ஏற்படுத்துமென எண்ணி முயன்ற போதிலும் அம்முயற்சிகள் ஒவ்வொன்றும்தோல்வியடைந்ததற்கு இது ஒரு காரணமாகும். கல்வியினதும், புலமையினதும் இலட்சணம் எனப் பண்டைக்கால ஆசிரியர் மேற்கொண்ட எளிமையான வாழ்க்கையினையே அரச குடும்பங்களிலிருந்து கல்வி பயில வந்தவர்களாயினும் கைக்கொண்டனர். அது வேறு வகையினதான ஒரு விழுமியம், அதில் ஒரு நம்பிக்கை இன்றைய கிராமப்புற மாணவனது உள்ளத்தில் உறைந்திருக்கவில்லை என நாம் கொள்ளமுடியாது. பண்டைய மரபுவழி ஆசிரிய–மாணவ உறவைப் பொறுத்தவரையில் மாணவனிலும் பார்க்க ஆசிரியர் ஆத்மீக மேம்பாடுடையவராகவே, அதாவது புலமைப் பேறுகளிலும் மதியாற்றலிலும் மேம்பாடு உடையவராகவே கருதப்பட்டார். இன்று ஆசிரியரின் சமூக, பொருளாதார மேம்பாட்டு நிலையானது இன்றைய சமூக அமைப்பிலே திறமையின் அடிப்படையிற்ருன் வழங்கப்பட்டவை எனக் கொள்ளமுடியாத தகுதிக்குப் புறம்பான வாய்ப்புக்களாற் கிடைத்தவை என்பது இளந்தலைமுறையினரின் கருத்தாகும்.

ஆங்கிலம் பேசி, முள்ளுக்கரண்டிகளாற் சாப்பிட்டு, ஆசிரியர்களுக்கு இன்தேறலும் வழங்கப்பட்ட விருந்துகளிற் பங்கெடுத்த ஆரம்பகாலத்தில் எல்லாம் சிறப்பாகவே அமைந்தன. அக்காலத்தில் தொடர்பு விரிசலை ஆசிரியர்கள் உணரவில்லையெனில் அதற்கான காரணம் மாணவர்கள் அதிகம் அறிந்தவர்களாகவும் அதிகம் கற்றவர்களாகவும் இருந்தமையா அல்லது அம் மாணவர்கள் ஆசிரியர்களின் வர்க்கத்தினராய் அவர்களுக்கிடையிற் பொதுவான நலன்கள் இருந்தமையா? கிராமப் புறங்களிலிருந்தும் சமூகத்தின் வறிய மட்டங்களிலிருந்தும் பெரும்பாலான மாணவர்கள் வந்தபோது அதிகரித்தது சமூக–பொருளாதார, பண்பாட்டு விரிசல் அல்லவா?

பேராசிரியர் எதிரிவீரசரச்சந்திர

ஆகவே பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமிடையிலான விரிசல் அறிவு நிலை வேறுபாடுகளால் மட்டும் ஏற்பட்டது என்றே அல்லது அவர்கள் தேடிக்கொண்ட அறிவின் வேறுபாடுகளால் ஆனதென்றே கூறுவது உண்மையின் ஒரு பகுதியாகும். தங்களைச் சூழ்ந்துள்ள சலிப்புத் தரும் நடப்பியல் வாழ்வுக்கப்பாற் சேய்மைப்படுத்தப்பட்டுத் தந்தக் கோபுரங்களில் வசிப்பதற்கு வசதியான உத்தியோகங்களையும், சிறப்புரிமைகளையும் அடைவதற்கான கற்றல், புலமை அமைகின்றன எனக் கொண்ட அவர்கள் அவற்றைப் பொருட்படுத்த மறுத்தனர் என்பதை நாம் மறந்துவிடலாகாது.

### உளவியற்பாட்டின் வேறுபாடு

இந்நிலையின் தர்க்கரீதியான தன்மையைக் காட்டிலும் உளவியற்பாட்டினையே நாம் கவனத்திற் கொள்ளவேண்டும், ஏனைய பல்கலைக்கழகங்களுக்கு முன்மாதிரியாக அமைந்த பேராதனைப் பல்கலைக்கழகக் கல்வி முறையும், ஆசிரியர் வாழ்க்கையும் அன்றைய இளைஞர்களுக்கு அதிருப்தியை அளித்தன. இந்த அதிருப்தியின் குமுறல்கள் அறுபதுகளின் ஆரம்பத்திலேயே ஒலித்தன. சிறப்புரிமை பெற்ற வர்க்கங்களின் கடைசி அரண் பேராதனை எனப் பெரும்பாலும் சிங்களப் பத்திரிகைகளிற் கண்டிக்கப்பட்டது. பேராதனையில் மூன்ருண்டுகள் பயின்று ஐம்பதுகளின் பிற்பகுதியிற் பட்டதாரியாகிய ஒருவர், 'ஒட்டுண்ணிகளின் ஒரு சுவர்க்கம்' என்ற தமது நூலிற் பேராதனைப் பல்கலைக்கழகத்தைக் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கினர். அவ்வாறு தாக்கியது பல்கலைக்கழகத்திற் சித்தியடைந்த ஒருவருக்கு வேலை கிடைப்பது உறுதியாக இருந்த காலத்திலேயாகும். எனவே உத்தியோக வாய்ப்புகள் அரிதாக இருந்த அறுபதுகளின் பிற்பகுதியிலும், எழுபதுகளின் முற்பகுதியிலும் வெளியேறிய பட்டதாரிகளின் அதிருப்தி எத்தகையதாக இருந்திருக்கும் என்பதை எம்மால் அநுமானிக்கமுடியும்.

### சமூக-பொருளாதாரப் பண்பாட்டு விரிசல்

ஆகவே ஐம்பதுகளின் முற்பகுதியில் இருந்த நிலைமைக்கும், அறுபதுகளின் பிற்பகுதியிலும், எழுபதுகளின் முற்பகுதியிலும் நெருக்கடியாக வளர்ந்த நிலைமைக்கும் இடையிலான வேறுபாடு அளவிலான வேறுபாடே என்பதை நாம் உணர்தல்வேண்டும். மாணவர்கள் சமூகத்தின் மேல்மட்டத்திலிருந்து வந்தபோது அதிகரித்தது சமூக–பொருளாதார, பண்பாட்டு விரிசல் அல்லவா?

### தாய்மொழிக் கல்வியா காரணம்?

இந்நிலை நாம் நினைப்பதிலும் பார்க்க அதிகம் சிக்கலானது என்பதைக் காட்டுவதற்காகவும், எளிமைப்படுத்தப்பட்ட காரண அநுமானங்களும் தீர்வுகளும் நிலைமையைச் சீராக்குவதற்குப் பதில் மோசமாக்கும் என்பதைக் காட்டுவதற்காகவுமே இவற்றைக் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். தாய்மொழிக் கல்விப்போதனையின் விளைவாகவே இத்தொல்லைகள் தோன்றின என்பதும் இதற்கான தீர்வு ஆங்கில மொழிப் போதனைக்கு மீளுவதோ அல்லது அப்படியானதொரு தரத்துக்கு ஆங்கிலப் போதனையை விருத்திசெய்வதோ என்பதும், நாம் எந்த நிலையிலிருந்து விடுபட முனைகிறேமோ அதேநிலையை ஏற்படுத்துவதாக அமையும். இன்று எம்மைச் சுற்றி எங்கணும் ஆங்கிலத்தின் அவசியம் வலியுறுத்தப்படுவதையும் ஆங்கில அறிவின் தரம் குறைந்துவிட்டது என்ற பிரலாபத்தையும் நான் செவியுறும் போது, கல்வியிலும் நிர்வாகத்திலும் தாய்மொழி புகுத்தப்பட்டதாற் பாதிக்கப்பட்ட வர்க்கங்கள் இக்குரல்களை எவ்வளவு தூரத்திற்கு எழுப்புகின்றன என வியக்கிறேன். பிரித்தானியாவின் ஏனைய குடியேற்ற நாடுகளைப் போலன்றி எமது நாட்டில் ஆங்கிலம் உலக அறிவுக் களஞ்சியத்திற்கான திறவுகோலாக அமைவதிலும் பார்க் அதிகாரத்தையும் கௌரவத்தையும் அனுபவித்த ஒரு வ்ர்க்கத்தின் விசேட சின்னமாகவும் சாதனமாகவும் ஆயிற்று. இவ்வர்க்கம் மீண்டும் ஒருமுறை தலை தூக்கி ஆம்கிலத்தை அரியாசனத்தில் அமர்த்த முயல்கின்றது. அவ்வாருன முயற்சி திரும்பவும் கசப்பான வர்க்க வேறுபாடுகளை ஏற்படுத்திக் கிராம மக்களுக்குச் சந்தர்ப்பங்களை மறுத்து, எம்மைப் பண்பாட்டு ரீதியாக வறுமைப்படுத்திவிடும்.

பிரித்தானிய மாதிரியில் அமைக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள் எமது சமூகத்துககுப் பொருந்தி வரவில்லை என்பதனையும் எமது சமூகப்பகைப் புலத்திற்கமைய அவற்றின் கடமைகளை மறுவரையறை செய்யவேண்டும் என்பதனையும் காலங்கடந்த இன்றைய நிலையிலேனும் உணர்ந்து கொள்வதே தக்கது பல்கலைக்கழகங்களுக்கு முக்கியமாகப் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு எதிரான கண்டனங்கள் சூழ்ந்துள்ள சமூகத்தோடு அவை தொடர்புகொண்டிருக்க

(7ம் பக்கம் பார்க்க)

# மக்கள் கருத்து

## இந்து ஆலய பரிபாலனச்சட்டம்

உலகஇந்து மாநாடு தொடர்பாக இந்துவிவகார அமைச்சர் திரு. செ. இராசதுரை எடுக்கும் நடவடிக்கைகளை வரவேற்கும் அதேவேளையில், பல வருடங்களுக்கு முன்திட்டமிடப்பட்ட இந்து ஆலய பரிபாலனச் சட்டத்தை மீண்டும் உடனடியாகப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அச்சட்டத்தைநிறைவேற்றி வைக்க இதுதான் தகுந்த தருணம். ஏன்எனில் இந்து ஆலயங்களின் சொத்துக்களையும் வருமானங்களையும் ஏப்பமிட்டு நீதிமன்றங்களில் வழக்காடும் முதலாளிமார்களின் செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க இச்சட்டம் பெரிதும் உதவக்கூடும்.

இந்துஆலயங்கள்ஒன்றிணைக்கப்படுவதோடு அங்கு நடக்கும் கிரியைகள் நடைமுறைகள் சீர்செய்யப்படவேண்டும்.

பூசைகள், கிரியைகள் செய்யும் இந்துக்குருமார்கள் குடும்பங்கள் கண்ணியமானமுறையில் வாழ்க்கை நடத்தஅவர்களைத் தகுதியானவருமானமுடையோராக்குதல் உலகெங்கும்உள்ளஇந்துக்குருமார்களுக்குஅவசியமாகும்.

— வெ. சு. நடராசா.
'கலாபவனம்'
நல்லூர்.

## நடவடிக்கை எடுப்பார்களா?

வட்டுக்கோட்டை தபால் கந்தோரிலுள்ள சுவர்மணிக்கூடு கடந்த ஆறுமாதகாலமாக இயங்கவில்லை. இதனுல் கந்தோருக்கு வரும் பொது மக்கள் நேரம் பார்க்கமுடியாது அசௌகரியமடைந்துள்ளனர்.

தபால் திணைக்களத்தினர் இந்த சுவர் மணிக்கூட்டை திருத்துவதற்காக எடுத்துச் சென்றும், இதுவரை அதனைத் திருத்தி தபால்கந்தோரில் கையளிக்கவில்லையாம். இது தொடர்பாக தபால் திணைக்கள உயரதிகாரிகள் நடவடிக்கை எடுத்து, அந்த சுவர் மணிக்கூட்டை திருத்தி மீண்டும் அதனை இந்த தபால் கந்தோரில் இடம்பெறச் செய்வார்களா?

— 'வெற்றி'
வட்டுக்கோட்டை.

போக்லண்ட் தீவுகள் நெருக்கடி:

# தென்ஜோர்ஜியாவை பிரிட்டன் மீண்டும் கைப்பற்றியது!

## தாக்குதலில் 3 பேர் பலி!

லண்டன், ஏப். 26

போக்லண்ட் தீவுகளிலுள்ள தென்ஜோர்ஜியாவை பிரிட்டிஷ் கடற்படை மீண்டும் கைப்பற்றியுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

பிரிட்டிஷ் படைகளுக்கும் ஆர்ஜென்டீனா படைகளுக்கு மிடையே இதுசம்பந்தமான சண்டை சுமார் இரண்டு மணித்தியாலங்கள்வரை இடம்பெற்றதாகவும் அதன் பின்னர் ஆர்ஜென்டீனா துருப்புக்கள் சரணடைந்ததாகவும் பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சர் திரு. ஜோன்நொட் தெரிவித்தார்.

தென்ஜோர்ஜியாவில் பிரிட்டிஷ் படைகள் குண்டு வீச்சு தாக்குதல்களைகளையும் விமானத்தாக்குதல்களையும் ஹெலிகாப்டர் தாக்குதல்களையும் நடத்தியதாக அவர் தெரிவித்தார்.

அதேவேளை பிரிட்டன் ஆர்ஜென்டீனாவுக்கு எதிராக யுத்தப் பிரகடனம் செய்யவில்லையென்றும் பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சர் கூறினார்.

### மூவர்பலி

இத்தாக்குதலின் போது மூன்று பேர் பலியானதாகவும் ஆர்ஜென்டீனா அறிவித்துள்ளது.

1956-ம் ஆண்டு சூயஸ்கால்வாய் சம்பந்தமான பிரச்னைக்குப் பின்னர் பிரிட்டன் தற்போதுதான் இத்தகைய தாக்குதலொன்றை நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பிரிட்டன் தென்ஜோர்ஜியாவைக்கைப்பற்றியதைத் தொடர்ந்து ஆர்ஜென்டீனா பிரிட்டனுடனான சமரசப் பேச்சுவார்த்தைகளை நிறுத்தியுள்ளதாகக் கூறப்பட்டது. போக்லண்ட் தீவுகள் பிரச்னை குறித்து ஆர்ஜென்டீனா வெளிநாட்டமைச்சர் திரு. மெண்டிஷ் அமெரிக்க வெளிநாட்டமைச்சர் திரு. அலெக்சாண்டர் ஹெய்க்குடன் நடத்தவிருந்த சமரசப்பேச்சுவார்த்தைகளை ஒத்திவைத்துள்ளார்.

போக்லண்ட்தீவுகள் பற்றிய நிலைமையை அமெரிக்கா உன்னிப்பாகக்கவனித்து வருவதாகவும், இப்பிரச்னைக்கு ராஜதந்திர அடிப்படையில் தீர்வு காண்பதையே அது விரும்புகிறதென்றும் வெள்ளைமாளிகை அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

பிரிட்டன் தென்ஜோர்ஜியா மீது மேற்கொண்ட தாக்குதலின் போது ஆர்ஜென்டீனாவின் நீர்மூழ்கிக்கப்பலொன்று மூழ்கடிக்கப்பட்டதாகவும், அதன் மூன்று கப்பல்கள் பிரிட்டனின் தாக்குதலைச் சமாளிக்கமுடியாது பின்வாங்கியதாகவும் கூறப்பட்டது. (வெ)

### 200 கிறிஸ்தவர்கள் இந்து மதத்தில் சேர்ந்தனர்

சென்னை ஏப். 26

200 கிறிஸ்தவர்கள் மீண்டும் இந்து சமயத்தில்சேர்ந்துள்ளார்கள்.

திருச்சி மாவட்டத்தில் இது இடம்பெற்றுள்ளது. திருச்சியை அடுத்துள்ள கிராமங்களில் வாழும் கிறிஸ்தவர்களே இவ்வாறு இந்து மதத்தில் சேர்ந்துள்ளனர். இன்னும் பலர் இந்து சமயத்தில் சேர விருப்பதாகத் தெரிகின்றது.

பாகிஸ்தானில்

# பத்திரிகை அலுவலகங்கள் நேற்று மூடப்பட்டன!

இஸ்லாமாபாத் ஏப். 26

பாகிஸ்தானிலிருந்து வெளிவரும் இரு தினசரிப்பத்திரிகைகளின் அலுவலகங்களை மாணவர்கள் தாக்கியதற்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக அங்குள்ள பத்திரிகைக் காரியாலயங்கள்யாவும் நேற்று மூடப்பட்டன.

கடந்த வெள்ளிக்கிழமை லாகூரில் இத்தாக்குதல் இடம்பெற்றது தெரிந்ததே.

இதுதொடர்பாகத் தாங்கள் நேற்று மேற்கொண்ட வேலைநிறுத்தம் வெற்றியளித்துள்ளதாக பத்திரிகையாளரொருவர் தெரிவித்தார்.

பாகிஸ்தானில் நேற்று எந்தவொரு தினசரிப்பத்திரிகையும் வெளிவரவில்லையென்றும் அவர் கூறினார். (வெ)

### ஆர்ஜென்டீனாநீர்மூழ்கி தாக்கப்பட்டது

லண்டன் ஏப் 26

ஜோர்ஜியா தீவுக்குஅருகில் ஆர்ஜென்டீனா நீர்மூழ்கியொன்றை பிரிட்டிஷ் கடற்படையின் ஹெலிகொப்டர் தாக்கியது.

ஐ. நா. சாசனப்படி தற்காப்பு நடவடிக்கையாகவே பிரிட்டிஷ் அரசு இந்தத் தாக்குதலை மேற்கொண்டது என்று பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. (கி)

### பத்திரிகை ஆணைக்குழு

டாக்கா, ஏப். 26

பங்களாதேஷில் பத்திரிகையாளர்களின் நலன்களையும், அலுவல்களையும் கவனிக்க அந்நாட்டு அரசாங்கம் பத்திரிகை ஆணைக்குழுவொன்றை நியமித்துள்ளது. (வெ)

# “நல்லூர் மீண்டும் பெருமை பெறவேண்டும்”

## சங்கிலியன் திறந்தவெளியரங்கு திறப்பு விழாவில் ‘சிவா’

(அரியாலை)

“தமிழினத்தை ஆண்ட இறுதித்தமிழ்மன்னன் சங்கிலியன் அரசோச்சிய பூமி நல்லூராகும். அதே மண்ணில் சங்கிலியனின் பெயரில் இம்மன்றத்தை அமைத்துசெயல்பட்டு வரும் நிர்வாகிகளுக்கும் இப்பகுதி மக்களுக்கும் எனது நல்வாழ்த்துக்கள். இந்த நல்லூர் மீண்டும் பெருமைபெறவேண்டிய சூழ்நிலையை நாம்அமைக்க வேண்டும்”.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும், நல்லூர்த்தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினருமான திரு. எம். சிவசிதம்பரம் நல்லூர் சங்கிலியன் மன்றத் திறந்த வெளியரங்கை மங்கல விளக்கேற்றி திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

### நிதிவசதி

மன்றத்தலைவரும், சட்டத்தரணியுமான திரு. கனக. கேசவன் தலைமையில் நடைபெற்ற இத்திறப்புவிழாவில் திரு எம். சிவசிதம்பரம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

“சங்கிலித் தோப்பையும்: நல்லூரையும் எண்ணிப்பார்க்கையில் ஆண்ட இனம் மீண்டும் ஒருமுறை ஆளவேண்டுமென்ற மனநினைவு எமக்குத்தோன்றுகின்றது. சரித்திரப்பிரசித்தி பெற்ற அநேகஇடங்கள்இன்று அழிந்து கொண்டு போகின்றன. இவற்றை அழிவிலிருந்து காப்பாற்றி இதன் பெருமைகளை எமது பின்சந்ததியினர் அறியும் வண்ணம் பேணிப் காப்பது எமது கடமையாகும். அரசாங்கம் ஒவ்வொரு தொகுதிக்கும் இருபத்தைந்து லட்சம் ரூபாவை மட்டும் ஒதுக்கித்தருகிறது. இப் பணத்தைக் கொண்டே இத்தொகுதியிலுள்ள கல்லூரிகளின் கட்டிடங்கள்; வாய்க்கால்கள், மின்வசதிகள், வீதிகள் அமைத்தல் செப்பனிடல் ஆகிய வேலைகளைச் செய்ய வேண்டியிருக்கிறது. நல்லூர்த் தொகுதியில் பெரிய கல்லூரிகள் பல இருக்கின்றன. இக்கல்லூரிகளுக்கான கட்டிட வசதி போன்ற பல வசதிகளைச்செய்து கொடுக்க வருடாவருடம் பெருமளவு நிதியைச் செலவிடவேண்டியுள்ளது. இருந்தும் இன்று விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு ஏற்ப இவ்வரங்கு வேலைகளை முடிக்க நிதி ஒதுக்கீடு செய்து தர முயற்சிக்கிறேன். இந்த நாட்டில் வாழும் தமிழினம் மற்ற இனங்களுக்குச் சமனாக வாழக்கூடிய நிலைமைகள் ஏற்படவேண்டும். சங்கிலியன் இருந்து ஆட்சி செய்த நல்லூரின் பண்டைப் பெருமையை அழியாது பாதுகாப்பது உங்களது பாரிய கடமையாகும்.

### நாடகக்கலையை வளர்க்கவேண்டும்

“கலைத் துறையில் ஆற்றல் மிக்க இளைஞர்கள் வாழும் இப்பகுதிக்கு இந்தஅரங்குமேலும் கலையை வளர்க்க உறுதுணையாக அமையும். கலைகளுக்குப் புதிய கருத்துக்களை உண்டாக்கக்கூடிய நாடகக்கலைகளை வளக்கவேண்டும். சமுதாயம் புரட்சியை உண்டாக்கக்கூடிய கருத்துக்களைக்கொண்ட நாடகங்களை அரங்கேற்றவேண்டும். பழைய கதைகளை விடுத்து, மக்களின் சிந்தனைகளைத் தூண்டக்கூடியகருத்துச் செறிந்த புதிய நாடகங்களை அரங்கேற்றுவதன் மூலமே மக்கள் மத்தியில் அறிவையும் உணர்வையும் வளர்க்கமுடியும்” என்று குறிப்பிட்டார்.

திறப்பு விழாவிற்கு முன்னர் நல்லூர் சட்டநாதர் ஆலயத்தில் நடைபெற்ற விசேடபூசையின் பின்னர் நல்லூர்த்தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு எம். சிவசிதம்பரம், கோப்பாய்த்தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. எம். ஆலாலசுந்தரம் யாழ். மாநகர முதல்வர் திரு. இராசா விசுவநாதன், யாழ். மாநகர ஆணையாளர் திரு. சி. வி கே. சிவஞானம், கோப்பாய் உதவிஅரசாங்க அதிபர் திரு. கட்ணர் ஆகியோர் மன்றத் தலைவர் திரு. கனக. கேசவன் தலைமையில் ஊர்வலமாக திறந்தவெளியரங்குக்கு அழைத்துவரப்பட்டனர்.

மன்றக் கீதத்தைத் தொடர்ந்து மன்றத்தலைவர் திரு. கனக கேசவன் தமது தலைமையுரையில்; திறந்தவெளியரங்கு ஒன்று இல்லாததினால் கலை, கலாசார நாடக நிகழ்ச்சிகள் நடாத்த முடியாமல் இதுவரை இருந்துவந்ததாகவும், நல்லூர்த் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கித்தந்த ரூபா பத்தாயிரத்தைக் கொண்டு இத்திறந்த வெளியரங்கு அமைக்கப்பட்டுள்ளதென்றும், இவ் வரங்கில் மாதா மாதம்பௌர்ணமி விழாக்களை நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதென்றும் குறிப்பிட்டார்.

### இலட்சியத்தை அடைய....

யாழ். மாநகர முதல்வர் திரு. இராசா விசுவநாதன் பேசுகையில், “எமது இலட்சியத்தை அடைய முதற்படியாகவே மாவட்ட அபிவிருத்திச் சபைகள் அமைந்துள்ளன இதனை மக்கள் பூரணமாக ஆதரித்ததினால் நாம் பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றோம், மாவட்ட அபிவிருத்தி சபைகளின் செயல்பாடுகள் குறித்த பதினைந்து அம்சங்கள் பற்றி எமது தலைவர்கள் பேச்சுவார்த்தைகள் நடத்தி வருகி

(6ம் பக்கம் பார்க்க)

# அமெரிக்காவின் புதிய ராணுவத் தளங்கள்

மாஸ்கோ, ஏப். 26

கொலம்பியாவிலும், ஹோன்டுராவிலும் புதிய இராணுவத் தளங்களை நிறுவவும் ஏற்கனவே அங்குள்ள ராணுவத் தளங்களைப் புதுப்பிககவும் அமெரிக்கா தீர்மானித்துள்ளது என்று அவ்விரு நாடுகளின் அரசுகளிடம் அமெரிக்க அயல்துறை அதிகாரி டீன் பிஷர் அறிவித்துள்ளார்.

இந்தத் தளங்களை அமெரிக்க விமானப்படை பயன்படுத்தும். இதற்காக 2.1 கோடி டாலர்களை அமெரிக்க அரசு செலவிடும் என்றும் கூறியுள்ளார்.

“அமெரிக்க அரசின் நடத்தையில் இது ஒரு சாதாரண நிகழ்சியாகத் தோன்றலாம். ஆனால் உண்மையில், அமெரிக்க ராணுவத் தளங்கள் உலகெங்கும் பரவிக் கிடக்கின்றன. கொலம்பியா மற்றும் ஹோண்டுராஸ் உள்ளிட்ட லத்தீன் அமெரிக்க நாடுகளிலும் அவை உள்ளன. ஆனால் இதில் ஒரு விசேடம் என்னவெனில், கொலம்பியா மற்றும் ஹோண்டுராஸ் அரசுகளின் அனுமதி பெறுமல், தனது இஷ்டம் போல் புதிய இராணுவத் தளங்களை அமெரிக்கா கட்டமுனைந்துள்ளது அதிர்ச்சி அளிக்கிறது. இதுபற்றி நாங்கள் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கக்கூட இல்லை என்று கொலம்பியா அயல்துறை அமைச்சர் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

‘லாஸ் ஏஞ்செல்ஸ் டைம்ஸ்’ நிருபருக்கு அமெரிக்க வெளிநாட்டு அமைச்சர் அளித்த பேட்டியில், மத்திய அமெரிக்காவில் ராணுவத் தளங்கள் பற்றிய சாத்தியப்பாட்டின் சாதக பாதகங்கள் அனைத்தையும் வாஷிங்டன் ஆராய்ந்து வருகிறது என்று கூறியுள்ளார்.

“சைனய் பிரதேசம் கையளிப்பு

# மேற்காசிய சமாதானத்தில் புதிய சகாப்தமாகும்”

## எகிப்திய ஜனாதிபதி கூறுகிறார்

கெய்ரோ, ஏப். 26

“சைனய் பிரதேசத்தை இஸ்ரேல் எகிப்திடம்கையளித்தமை இருநாடுகளின் நட்புறவில் புதிய தொரு சகாப்தத்தை ஏற்படுத்தியுள்ளது.”

இவ்வாறு எகிப்திய ஜனாதிபதி ஜனுப் ஹொஸ்னி முபாரக் தொலைக்காட்சியொன்றில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

மேற்காசியா சமாதான முயற்சிகளில் முன்னாள் எகிப்திய ஜனாதிபதி ஜனுப் அன்வர் சதாத்தும், அமெரிக்க ஜனாதிபதி திரு. றீகனும் எடுத்து வந்த முயற்சிகளை இஸ்ரேல் பிரதமமந்திரி திரு பெஞ்சம் பெகினும், எகிப்திய ஜனாதிபதி ஜனுப் ஹொஸ்னி முபாரக்கும் பாராட்டியுள்ளனர்.

சைனய் பிரதேசத்தை 15 வருடங்களின் பின்னர் இஸ்ரேல் எகிப்திடம் கையளித்துள்ளமை தெரிந்ததே. (வெ)

யாழ். மாவட்ட வன்செயல்கள்:

# நஷ்டஈடு கிடைப்பதில் நம்பிக்கை இல்லை! 'யோகேஸ்' கருத்து

(யாழ்ப்பாணம்)

''தமிழ்மக்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பலவீனப்படுத்த ஒருபோதும் முனையக்கூடாது. தலைவர்கள் தவறு விடும்போது அதனைத் தொண்டர்கள் தட்டிக்கேட்க வேண்டும். தலைமைப்பீடத்தின் முடிவை, தனது முடிவாக உறுதிச்செயல்படுபவனே, உண்மைத் தொண்டனாக இருக்கமுடியும்.''

இவ்வாறு, அனலைதீவு வடலூர் சனசமூகநிலையத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட பாரதிநூற்றாண்டு விழாவில் சிறப்புவிருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றுகையில் யாழ்ப்பாண எம்.பி. திரு.வெ. யோகேஸ்வரன் கூறினார்.

திரு. வெ. யோகேஸ்வரன் மேலும் கூறியதாவது: 'பாரதியின் சிந்தனைகளிலிருந்து நாம் படிக்கவேண்டிய பாடங்கள் பலவுண்டு. புரட்சியின் காவலனாகவிளங்கிவரும் பாரதி எமது மக்களுக்கும் இனவிடுதலையை வளர்க்கும் கவிஞனாகவுள்ளார். எமது இனத்தின் விடுதலை வெகுதூரத்திலில்லை. என்றோ ஒருநாள் நாமும் விடுதலை பெற்றே தீருவோம்.

''எனது தொகுதியிலுள்ள பல இளைஞர்கள் நாளுக்கு நாள் கைதுசெய்யப்பட்டு வருகின்றார்கள். கைதுசெய்யப்பட்டுவரும் இளைஞர்களை எங்கு வைத்திருக்கின்றீர்கள் என்று நான் பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்பு கொண்டால், அமைச்சின் உயர் அதிகாரிகள் சிலர், ''இவனும் பயங்கரவாதி, இவன் ஏன் அநாவசியமாக தலையிடுகிறான்'' என்று கதைத்ததாக அறிகின்றோம் இந்த வகையில் எமது தமிழினம் அல்லல்பட்டு வாழ்ந்துகொண்டிருக்கின்றது.

''கடந்த ஆனிமாதம் எனது வீட்டை, ஜீப்பை எல்லாவற்றையுமே காவல்படையினர் எரித்தார்கள் என்ற உண்மையை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டார், ஆனால், காவல்படையினரால் எரிக்கப்பட்ட ஜீப்புக்கும், கடனாக எடுத்த டயர்களுக்கும் அரசாங்கத்திற்கு நான் மாதாமாதம் எழுநூறு ரூபா எனது சம்பளத்திலிருந்து கட்டிவருகின்றேன். இதனை தட்டிக்கேட்பதற்கு யாருமில்லை.

இப்பேர்ப்பட்ட சூழ்நிலையில் நாம் தமிழினத்தின் விடுதலைக்கு போராடி வருகின்றோம். மக்கள் எமக்கு வழங்கிய ஆணையில் இருந்து நாம் விலகுவோமானால், நாம் பாராளுமன்றத்திற்கு செல்வதில் பயனில்லை.

''யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வன்செயல்களை விசாரித்து நஷ்டஈடு வழங்குவதற்கான லயனல் குழு சிபார்சு செய்த தொகையில், யாழ்ப்பாண நூலகத்திற்கு ஒரு கோடியே பத்துலட்சரூபாவை வழங்க வேண்டுமென ஜனாதிபதிக்கு லயனல் குழு சிபார்சு செய்தது, ஜனாதிபதியோ பத்துலட்சரூபாவை ஜனாதிபதிநிதியில் இருந்தும், ஒரு கோடிரூபாவை பொதுமக்களிடம் இருந்து திரட்டி வழங்குவதாக முடிவுசெய்தார். இன்றையநிலையில் எதுவுமே கிடைக்காது என்ற நிலை உள்ளது. காவல்படையினரால் பொதுமக்களின் உடமைகள் சேதப்படுத்தப்பட்டாலும் அதற்கு அரசு நிவாரணம் வழங்கக்கூடிய நிலையில் இல்லை என்றே கூறுவேன்.

ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் உரையாற்றுகையில் கூறியதாவது:-

''மாவட்ட சபைகளின் மூலம் எமக்குக் கிடைத்திருக்கும் அதிகாரங்களை பயன்படுத்தி, ஏதாவது எமது மக்களுக்கு செய்யலாம் என்ற அடிப்படையிலே மாவட்ட சபைகளை நாம் ஏற்றோம், இந்த அரசாங்கம் ஸ்ரீ.ல.சு கட்சியின் அரசைவிட கொடுமையானது. முன்னைய அரசு காலத்தில் தொகுதிக்கு இருபத்தைந்து லட்சம் அபிவிருத்திக்கு வழங்கும் திட்டமே, இன்றுவரை செயல்பட்டு வருகின்றது. இந்த அரசினால் எமது பகுதிக்கு எந்த நன்மையும் புதிதாக் கிடைக்கவில்லை. மகாதேவா தாம்போதிக்கு பணம் தருவதாக கூறிச்சென்ற பிரதமஅமைச்சர் கூட இன்றுவரை ஒருசதநிதியும் கொடுக்கவில்லை. எமது தொகுதிக்கு வழங்கிய நிதியில் ஒவ்வொருலட்சமாக ஒவ்வொரு எம்.பி.யும் வழங்கியே, மகாதேவா தாம்போதி வேலைகள் நடைபெற்றுவருகின்றன. இந்தநிலையில் நாம் யாரையும் நம்பியோ, யாருடைய தயவைப் பெற்றோ எம்மை நாம் ஆளும்நிலைக்கு தள்ளப்படப் போவதில்லை, விடுதலையொன்றினாலே நாம் சுதந்திரம் பெறமுடியும்'' என்றார்.

விழாவில் பாரதியின் ஆத்மீக சிந்தனை என்ற தலைப்பில் திரு. க. சொக்கலிங்கம்; பாரதியின் பக்தி இலக்கியம் என்ற தலைப்பில் திருமதி. கலையரசி சின்னையா, கவியரங்கு திரு. காரை சுந்தரப்பிள்ளை தலைமையிலும், கருத்தரங்கு திரு. எஸ். சிவராமலிங்கம் தலைமையிலும் நடைபெற்றது.

விழாவில் குமரன், ஜெயராஜ், அனலை இராசேந்திரா, உட்பட பலர் பல்வேறு நிகழ்ச்சிகளிலும்கலந்துகொண்டனர். (கெ)

## காவலுக்கு படுத்தவர் பொருட்களுடன் மறைவு?

[மாவிட்டபுரம்]

கடையொன்றில் காவலுக்காக படுத்திருந்த இளைஞர் மாயமாக மறைந்துவிட்ட் அதே சமயத்தில் கடையிலிருந்து பல ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களையும் காணவில்லையாம்;

மாவிட்டபுரம்சந்தியிலுள்ள பல சரக்குக் கடையொன்றிலேயே இத்திருட்டு இடம் பெற்றுள்ளது.

மேற்படி கடையில் இரவுக் காவலுக்காக ஒருவர் படுப்பது வழக்கமெனவும் சம்பவதினம் கடையில் விற்பனையாளராக கடமைபுரியும் இளைஞரை காவலுக்காகபடுத்திருக்குமாறு கூறிவிட்டு கடைக்காரர் வீடு சென்றுவிட்டதாகவும்; காலையில் வந்து பார்த்தபோது இளைஞரைக் காணாததுடன் கடையிலிருந்த சுமார் 10 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியுடைய பொருட்களையும் காணவில்லையாம்.

இதுபற்றி காங்கேசன்துறை பொலிசில் புகார் செய்யப்பட்டதையடுத்து பொலிசார் புலன் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

மேற்படி இளைஞரை இக்கடையில் வேலைக்குச் சேர்ந்த நபர் ஒருவர் பொலிஸ் விசாரணைக்குட் படுத்தப்பட்டுள்ளார்;

## இளைஞர்களை சுடுவதன்மூலம் பாதுகாப்பை ஏற்படுத்த முடியாது

(கரவெட்டி)

''இளைஞர்களைச் சுட்டுப் பொசுக்கிவிடுவதனால் நாட்டில் பாதுகாப்பையும், அபிவிருத்தியையும் எந்தஆட்சியாளராலும் ஏற்படுத்திவிடமுடியாது''.

இவ்வாறு உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கம், யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைமன்றம் புத்தாண்டை முன்னிட்டு நடாத்திய கலாச்சார விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்,

தேசிய இளைஞர் சேவை மன்ற அதிகாரி திரு. கே சிவானந்தமூர்த்தி தலைமையில் கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியில் நடைபெற்ற இவ்விழாவில் உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கம்மேலும் பேசுகையில் கூறியதாவது:

''இன்று இளைஞர்கள் மத்தியில் விரக்தி தோன்றியிருப்பது இலங்கையில் மட்டுமல்ல சர்வதேசரீதியாகவும் காணக்கூடியதாகவுள்ளது. இந்த விரக்தியின் விளைவால் என்னஆபத்து ஏற்படப்போகின்றதோ என்ற அச்சம் உலகில் தோன்றியுள்ளது.

''இளைஞர்கள், இளைஞர் சக்திகள் ஒரு கட்டுக்கோப்பான முறையில் இருக்க வேண்டுமானால் நாட்டின் அபிவிருத்தி அமைப்பு இளைஞர்களுடன் இணைந்ததாக இருக்கவேண்டும் .

''1957க்குப் பின்னர் இந்த நாட்டில் ஏற்பட்டுவந்த அரசியல் சூழல், வேலையில்லாத் திண்டாட்டம் காரணமாகப் பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் உயிர் துறந்ததை எவரும் மறக்கமுடியாது. நாட்டின் எதிர்காலச் செல்வங்களாக விளங்கும் இளைஞர்களை சுட்டுப்பொசுக்கி விடுவதன் மூலம் நாட்டில் பாதுகாப்பையும், அபிவிருத்தியையும் எந்த ஆட்சியாளராலும் கொண்டுவரமுடியாது''.

## பாரதி விழாவும் ஆண்டு விழாவும்

(அரியாலை)

ஆனைக்கோட்டை திருவள்ளுவர் சேவாமன்ற சனசமூக நிலையத்தின் பாரதி விழாவும், பாலர் பாடசாலை ஆண்டு விழாவும் மே மாதம் 7ந் திகதி நடைபெறவிருக்கின்றன.

கவியரங்கு, வழக்காடு மன்றம் ஆகிய தலைப்புகளின்கீழ் நடைபெறும் இவ்விழாவில் யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா, எதிர்க்கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம், உடுவில் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் ஆகியோர்கள் பிரதம அதிதிகளாகக் கலந்துகொள்வர். (க)

# "தேர்தலை நாம் பகிஷ்கரிக்கவேண்டும்!

(யாழ்ப்பாணம்)

''நாடும், பாராளுமன்றமும் இல்லாத நிலைமையில் தான் பாலஸ்தீன மக்கள்தமது போராட்டத்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். தமக்கென நாடொன்றை அமைத்துக்கொள்ள பாலஸ்தீனியர் பல்லாண்டு காலமாகப்போரடி வருகிறார்கள். 1961–ம் ஆண்டுக்குப் பின்னர் மக்கள் இயக்கமாக நமது தலைவர்கள் எதனை நடத்தியிருக்கிறார்கள். போராடத்துணிந்த இளைஞர்களின் காலைவாரிவிடுபவர்களாக வே நமது தலைவர்கள் இன்றும் இருக்கிறார்கள்''

இவ்வாறு திரு. கோவை மகேசன் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் தமிழீழ விடுதலை அணியின் சார்பில் நடைபெற்ற மூதறிஞர் செல்வா, சிந்தனைசிற்பி அமரர் சி. கதிரவேற்பிள்ளை ஆகியோரின் நினைவு நாள் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

வைத்திய கலாநிதி எஸ்.ஏ. தர்மலிங்கம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திரு. கோவை மகேசன் தொடர்ந்து பேசுகையில்; ''பாராளுமன்றம் செல்வதால் எதனையும் சாதித்துவிடமுடியாது என்று சொல்லும் நாங்கள் தமிழீழப் பிரகடனத்தை ஆதரித்து எழுதினால் அச்சகத்திற்கு சீல் வைக்கப்படும் என்று அரசாங்கம் அச்சுறுத்தியபொழுதும் தமிழீழப்பிரகடனத்தை ஆதரித்து இன்றுவரை எழுதி வருகிறோம். அரசாங்கம் தனது சட்டப்புலத்தின் மூலம் எதையும் செய்யலாம். அதனை நாம் எதிர்கொள்ள ஆயத்தமாக இருக்கிறோம்'' என்றார்.

திரு. எஸ். செந்தூர்ராசா பேசுகையில், திரு. வைகுந்தவாசன் தமிழீழப்பிரகடனம் பற்றி இரண்டுவருட முன்னறிவித்தல் கொடுத்திருந்தார்' அப்பொழுது தமிழீழ யாப்பை அமைக்க குழுவொன்றை அமைக்கவிருக்கின்றோம் என்று கூட்டணிகூறியது. இது விடயம் குறித்து பொதுச்சபையில் எதுவுமே கூறாமல் இருந்துவிட்டு பிரகடனத்துக்குப் பின்னர் மக்கள் போராடத்தயாராக இல்லை. என்று இன்று கூறுகிறார்கள். தமிழீழப் பிரச்சனை குறித்து நாம் எதுவுமே பேசமாட்டோம் என்று ஜே. ஆருக்கு உத்தரவாதம் கொடுத்துவிட்டு இன்று வாய்மூடி மௌனமாக இருக்கிறார்கள். தலைவர்களைப் பழுதாக்குவது பாராளுமன்றப் பதவிகளாகும் இலட்சியமற்ற, பொறுப்பற்ற எதேச்சாதிகாரமான தலைமையை நிராசரிக்கவேண்டிய நிலைமைக்குஇன்றுதமிழ்மக்கள்

வந்திருக்கிறார்க
ஆணைக்குழுவா
யப்பட்ட தே
தமிழ்மக்கள்
போல எதிர்வரு
யும் நாம் பகிஷ்
டும். அஸாம்
நடத்தப்பட்ட
போல தேர்தல்
யிட முன்வே
போட்டியிடுவோர
த்துக் கிளர்ச்சி
டியது எமது கடை
என்று குறிப்பி
திரு. இர
கையில் வ
தான் தீர்ம
விடுதலை உணர்
சைப்படுத்தும்
நாம் புறக்கணிக்க
அவர்களின்
நாம் நிராகரிக்க
என்றார்.

வணபிதா செ
அடிகளார் பேசுகை
செல்வா தமிழர்
தின் முன்னர் ஒ
யத்தை வைத்
காக தன்னை அ
உழைத்தார். த
இலட்சியத்தூய்மை
தான் மக்களை
செல்ல அவர்களா
இலட்சியவாதிகளு
யாக இருக்க
வெறும் அரசியல்

முதலீட்டாளருக்கு மற்றுமோர் அதிபெரிய ஊக்குவி

மெர்க்க

ரூபா 200,0

வைப்புகளுக்கு மே

வருடம் 30% வரை

MASTERS MC 52/81

ஒரு தொகை வைப்பா

2 வருட வைப்புக்க
30%
வருட வருமானம்
போனசும் முதிர்ச்சியி
செலுத்தப்படும்.

ரூபா 200,000/- க்கும் குறைவான வைப்புக்கள் வட்டியும் போனசும் முதிர்ச்சியின் பின்னர் செலுத்தப்படுதல்

2 வருடங்கள் :-

27% வருட வட்டி ரூபா 100,000/- க்கும் அதிலும் கூடிய வைப்புக்களும்!

25% வ. வ. ரூபா 50,000/- இல் இருந்து ரூபா 100,000/- க்கும் குறைந்த வைப்புக்களுக்கு

24% வ. வ. ரூபா 2,500/- இல் இருந்து ரூபா 50,000/- க்கும், குறைந்த வைப்புக்களுக்கு

ஒரு வருடம்

22% வ. வ. ரூபா 2500/-ம் அதற்கும் மேற்பட்ட வைப்புக்களும்.

வட்டியும்
டம் செ
2 வரு
24%
வைப்புக்
22%
க்கும் கு
21%
க்கும் கு
ஒரு வ
20%
களும்

மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிடெ

’’

டானமூர்
ல் செய்
ல அன்று
கரித்தது
தேர்தலை
வேண்
ணத்தில்
ச்சிகளைப்
போட்டி
ாரையும்
ம் எதிர்
வேண்
பாகும்’’

பேசு
மக்கள்
வண்டும்
கொச்
லவர்களை
வண்டும்.
மைகளை
வண்டும்.

த்தினம்
தந்தை
மூதாயத்
இலட்சி
. அதற்
பணித்து
ர்களிடம்
ருந்தால்
நடத்திச்
முடியும்
தூய்மை
வண்டும்.
சும் தலை

வனின் கையில் மக்களின் விடுதலை இயக்கத்தைக் கொடுத்துவிட்டுப் பேசாமல் இருக்க முடியாது. எமக்கொரு இலட்சியம் வேண்டும். அந்த இலட்சியத்தை ஏற்று நடத்தும் தலைவர்களாக நாமே இருக்க வேண்டும். தலைவர்கள் ஏமாறினால் நாம் ஏமாற்றப்படுகிறோம். அதில் எமக்குப்பங்குண்டு. அமெரிக்கா, கனடா, பிரித்தானியா போன்ற நாடுகளில் வாழும் தமிழ் மக்கள் இலங்கையில் வாழும் தமிழ் மக்களது தமிழீழம் குறித்து கருத்துள்ளவர்களாக இருக்கிறார்கள். விமரிசனம் குறைந்தால் சர்வாதிகாரம் தலையெடுக்கும் நமது தலைவர்கள் சமீப காலமாக பேசிவரும் பேச்சுக்கள் தமிழ் மக்கள் விடுதலைப் பாதையை வட்டுச்செல்வது போலத் தெரிகிறது. பேசுவது மட்டுமல்ல தலைவர்கள் சிந்தித்துச் செயல்பட தேண்டும் தலைவர்களுடன் நாமும் சேர்ந்து அவர்களுடன் செல்ல வேண்டும் அப்பொழுது தான் நாம் விடுதலையை விரும்பும் போராளிகளாக வாழ்வோம் என்று குறிப்பிட்டார்.

திரு. ஈழவேந்தனும் கூட்டத்தில் பேசினார்.

(அரி, நிரு.)

## கிராமோதயசபைத் தலைவர்

[யாழ்ப்பாணம்)

மறவன்புலோ பகுதிக் கிராமோதய சபைத் தலைவராக கோயிற்குளம் அ. த. க. பாடசாலை அதிபர் திரு. வே, இராமர் போட்டியின்றி ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். கைதடி நாவற்குழி தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவராக இருக்கும் இவர் கைதடி நாவற்குழி கிளை ப. நோ. கூ சங்க ஆரம்ப அங்கத்தவராகவும் அதன் செயலாளராகவும் மகா விஷ்ணுக தொ. கூ. சங்கச் செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

## வில்லிசை நிகழ்ச்சி

(புங்குடுதீவு)

புங்குடுதீவு கண்ணகை அம்மன் என வழங்கப்படும் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் திருவிழாவில் ‘அன்புக் கடல், திருப்பூங்குடி வி. கே ஆறுமுகம் அடுத்த மாதம் இரண்டாம் திகதி வரை தினமும் மாலை ஐந்து மணிக்கு வில்லிசை நிகழ்த்தி வருகிறார். இன்று ‘‘அன்னையின் தபசு’’ என்ற தலைப்பில் வில்லிசை நிகழ்த்துவார்.

‘‘கல்வி அமைச்சர்களின்

# கல்விக் கொள்கையால் பாதிக்கப்படுபவர்கள் மாணவர்களே’’

### பரிசளிப்பு விழாவில் ‘அமிர்’’

[சுழிபுரம்]

‘‘யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள தமிழ் மாணவர்கள் மட்டுமே பல்கலைக்கழகம் செல்ல அதிக புள்ளிகள் எடுக்க வேண்டியுள்ளது. ஏனைய மாவட்டங்களிலுள்ளவர்கள் ஓர் குறிப்பிட்ட புள்ளிகளைப் பெற்றுக்கொண்டால் போதும் இந்த நிலமையால் எமது மாணவர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். கல்வி அமைச்சர்கள் தங்கள் முத்திரையை கல்விக் கொள்கையில் பொறிக்க முயல்வதால், கல்வியில் மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது, இதனால் பாதிக்கப்படுபவர்கள் மாணவர்களே இந்த கல்வி மாற்றத்திற்கு ஓர் முடிவு காணவேண்டும் என்ற நோக்கைக் கொண்டே புதிதாகச் செயல்படும் மாவட்ட சபைகளுக்கு கல்வி சம்பந்தமான விடயங்களை கவனிக்க அதிகாரம் வழங்க வேண்டும் என்பதை நாம் வலியுறுத்தி வந்துள்ளோம். கல்வி வெள்ளை அறிக்கை விவாதத்தின் போதும் எமது கருத்தை வலியுறுத்தி வந்துள்ளோம்.’’

இவ்வாறு எதிர்க்கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினர்ாகக் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார். கல்லூரி திறந்த வெளியரங்கில் நடைபெற்ற இவ் விழாவிற்கு கல்லூரி அதிபர் திரு. க. அருணசலம் தலைமைவகித்தார்.

திரு. அமிர்தலிங்கம் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது::

‘‘எமது மாணவர்களுக்கு பல்கலைக்கழகம் செல்வதற்கு பல சோதனைகள், தடைகள், உள்ளன. உயர் சல்வி கற்றவர்களுக்கு ஐந்து வீதம் தானும் உத்தியோகம் வழங்கப்படவில்லை. வெளிநாடுகளுக்கு சென்று வேலை பெறுவதில் தான் எவ்வளவு கஷ்டம். இவ்வாறான துன்பத்தில் துயர்ப்படும் எமது மாணவர்களுக்கு ஆட்சியாளர்களின் னகயை எவ்வளவு காலம் எதிர்பார்த்து வாழலாம். நான் ஒன்றை மட்டும் இவ்விடத்தே எமது இளைஞர்களுக்கு கூறுவேன்.

,‘நீங்கள் தன்னம்பிக்கையுடன் ஒரு கட்டுப்பாடான வாழ்வு வாழ்ந்து உங்கள் வாழ்வை வழமாக்கிக் கொள்ளுங்கள். தேவையற்ற செயல்களில் ஈடுபட்டு பெரும் துன்பத்தை அடையாது மற்றவர்களுக்கும் கஷ்டம் கொடாது இருந்துகொள்ளுங்கள். நிச்சயமாக நீங்கள் முந்னேறுவீர்கள்.’’

நான் எனது தன்னம்பிக்கையுடன் செயல்ப்பட்டதால் இன்று மதிக்கப்படும் நிலைமைக்கு வளர்ந்துள்ளேன். எனக்கு சோதனைகளும், துன்பங்களும் நிறைந்தாலும் தன்னம்பிக்கையுடன் வாழ்கின்றேன். அதே போல் நீங்களும்

(8ம் பக்கம் பார்க்க)


ன்டைல் கிறெடிட் லிமிட்டெட்

00 க்கும் அதற்கும் மேலான
வும் அதிக வருமானம்..

டும் ரூபா 200,000/- இரு வருடங்களில் ரூபா 320,000/- ஆக வளருகிறது.

| | 2 வருட வைப்புக்களுக்கு | 1 வருட வைப்புக்கள்க்கு | 1 வருட வைப்புக்களுக்கு |
|---|---|---|---|
| ட்டியும் பின்னர் | **27%** வருட வருமானம் வட்டியும், போனசும் மாதாந்தம்/கால் வருடம்/அரை வருடம் செலுத்தப்படும். | **26%** வருட வருமானம், வட்டியும் போனசும் முதிர்ச்சியின் பின்னர் செலுத்தப்படும். | **24%** வருட வருமானம் வட்டியும் போனசும் மாதாந்தம்/கால் வருடம் /அரை வருடம் செலுத்தப்படும். |

ானசும் மாதாந்தம், கால் வருடம் அரை வரு
தப்படுதல்
கள் :-
. ரூபா 100,000/- மும் அதற்கும் மேற்பட்ட
ம்
. ரூபா 50,000/-இல் இருந்து ரூபா 100,000/-
ந்த வைப்புக்களுக்கு
. ரூபா 2500/- இல் இருந்து ரூபா 50,000/-
ந்த வைப்புக்களுக்கு.
டம்
. ரூபா 2500/-ம் அதற்கும் மேற்பட்ட வைப்புக்

நம்பிக்கைப் பொறுப்பிற்கும் பாதுகாப்பிற்கும்
பின்வரும் புள்ளி விபரங்கள் சான்று கூறுகின்றன:-

| | 1978/79 | 1979/80 | 1980/81 |
|---|---|---|---|
| | (ரூபா) | (ரூபா) | (ரூபா) |
| முதலீடு | 2,250,000 | 2,250,000 | 5,000,000 |
| ஒதுக்கம் | 7,628,000 | 15,668,000 | 20,450,000 |
| வைப்புக்கள் | 72,513,000 | 125,835,000 | 174,094,000 |
| கடன்பாடுகள் | 32,589,000 | 29,623,000 | 74,723,000 |
| முதிசச் சொத்து | 135,977,000 | 201,311,000 | 329,154,000 |
| வரியின் முன் லாபம் | 4,764,000 | 3,821,000 | 8,170,000 |
| வரியின் பின் லாபம் | 2,614,000 | 3,821,000 | 8,170,000 |
| லாபப் பங்கிடு (வருட இறுதியில்) | 375,000 | 925,000 | 925,000 |

இலங்கையில் அதி பெரியதும் உறுதி வாய்ந்ததுமான நிதி நிறுவனம்
6500க்கும் அதிகமான வைப்பாளரின் அதிக நன்நம்பிக்கையைப் பெற்றுத் திகழும் நிறுவனம்.

ஆளுநர்கள் சபை
என். யூ. ஜயவர்த்தன
(முதல்வர்)
ஏ. என். யூ. ஜயவர்த்தன
(பிரதி முதல்வரும் முகாமை ஆளுநரும்)
கே. விக்னராசா
(ஆலோசனை ஆளுநர்)
திருமதி. வை. என். பெரேரா
(நிறைவேற்று ஆளுநர்)
எஸ். எம். ஹுசெயின்
எஸ். பத்மநாதன்
கே. செல்வநாதன்
(பதில் எம். செல்வநாதன்)
ஆர். சேனாதிராஜா
எம். டீ. எச். ஜயவர்த்தன

பிரதான வர்த்தக அலுவல்கள்
வாடகைக் கொள்வனவு நிதி, கடன் நிதி, குத்தகை நிதி, உறுதி வசதிகள், ஊக்குவிப்பு வசதிகள், வங்கி வசதி ஏற்பாடுகள் வர்த்தகம்

தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் சகல வகைக் காப்புறுதிகளையும் புரியும் பிரதான முகவர்

ஏனைய விபரங்களுக்கும் சேவைகளுக்கும் நாடுக:



மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட்
(1956 ஜூலை 4-ம் திகதி நிதிச்சட்டத்தின் பிரகாரம் அங்கீகாரம்பெற்றது)
51, 55, ஜனுதிபதி மாவத்தை, கொழும்பு 1.
தொலைபேசி: 26611 - 8;
சர்வதேசத் தொடர்பு இலக்கம்: 547982
அன்றேல் உங்கள் அருகே உள்ள எங்கள் கிளை நிலையத்தில்:
அநுராதபுரம்:
2, ஹரிஸ்சந்திர மாவத்தை, தொலைபேசி: 534
யாழ்ப்பாணம்:
11/8, ஸ்ரான்லி வீதி, தொலைபேசி: 321
மாத்தறை:
27, 1/1, தர்மபால மாவத்தை,
தொலைபேசி 041-2466
கண்டி:
115, (1-ம் மாடி) கொட்டுகொடலை வீதி,
தொலைபேசி: 08 - 4196
ஏனைய முக்கிய நகரங்களிலும் முகவர்கள் உள்ளனர்.
பொது மக்கள் நம்பிக்கையில் உருவான உறுதியான அமைப்பு.

28-4-82 வரை
வெஸ்லி மானிப்பாய்
தினசரி 2.30, 6.15 9.15
ஜெமினி – விஜயா
ராமு

Regal
Daily 10-30, 2-15, 4 30, 7-00 9-30
Peter Finch, William Holden
in
NET WORK
(Color)
(Winner of four Academy Awards
விரைவில்!
கயலும் கயரும்
[கலர்]
மலையாளப்படம்

மூன்றாவது வாரம்
ஹரன் யாழ். நகர்
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த், மாதவி
தேங்காய் சீனிவாசன்
தில்லுமுல்லு

ராணி (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00, 4-30, 7-00, 9-30
TARZAN THE APE MAN
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
The Man From Honghong

லிடோ (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி – சாவித்திரி
காத்திருந்த கண்கள்

சாந்தி (யாழ்நகர்) 10-30, 2-30, 6-15, 9-45
ஜெய்சங்கர்...ஜெய்சித்ரா...சுருளி...மனோரமா
உங்கள் விருப்பம் (புதிய பிரதி)

எதிர்பாருங்கள்!
கமல் (இரு வேடங்கள்) கடல்மீன்கள்
[கலர்]

இன்று மட்டும்
ராஜா தினசரி 10.30, 2.30, 6.30, 9.30
[யாழ்ப்பாணம்)
சிவாஜி சிவகுமார் காவல் தெய்வம் (புதிய பிரதி)
From 28-4-82
SCORPIO [Color-Scope]

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த—ஸ்ரீபிரியா நடித்த
பொல்லாதவன்
(ஈஸ்ட்மன் கலர்)

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
முத்துராமன் - விஜயா - நாகேஷ்
சர்வர்சுந்தரம் (புதிய பிரதி)
வெகுவிரையில் அலைகள் ஓய்வதில்லை

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
''காதல் தியாகத்திலேதான் முழு வடிவம்பெறுகிறது!'' பார்ப்பதற்கு மனங்கவரும் வண்ணக் காட்சிகளும், கேட்பதற்கு இனிய பாடல்களும், உணர்வதற்கு கருத்தாழம் நிறைந்த உரையாடல்களும், மொத்தத்தில் அற்புதமான திரைக் காவியந்தான் நட்சத்திரம்!
இப்பொழுது 4வது வாரமாக வெற்றிநடைபோடுகிறது
நட்சத்திரம்
(ஈஸ்ட்மன் கலர்)


# இன்றைய பலன்

சித்திரை மாதம் 14ம் திகதி

செவ்வாய்க்கிழமை

(27—4—82)

மேடம்: எதிர்பாராத செலவினங்களினால் பாதிக்கப் படுவீர்கள் கடன் வாங்கவும் நேரிடலாம் சமீபத்தில் நடைபெற்று முடிந்த சம்பவம்ஒன்று வேதனையைத்தரலாம்.

இடபம்: அதிக ஆசையினால் அவஸ்தைதப்படுவீர்கள் சிலர் வழக்கு விவகாரங்களில் மாட்டிக்கொள்ளலாம் குறுக்கு வழித் தலையீடு உங்கள் கோபத்தைக் கிளறிவிடும். அடக்கம் நன்று.

மிதுனம்: பொருளாதாரத் துறையில் நல்ல முன்னேற்றம் காணப்படுகிறது கொடுக்கல் வாங்கல்மூலம் அதிக ஆதாயத்துக்கு இடமுண்டு குடும்பத்தில் மகிழ்ச்சியுண்டு இன்று நல்லநாள்.

கடகம்: பேராசையின் மூலம் குறுக்கு வழியை நாடுவீர்கள் மறைமுக எதிர்ப்புக்களை சமாளிக்கவேண்டிய நிலை ஏற்படும் முன் எச்சரிக்கை நன்று.

சிங்கம்: வாகன விருத்தியுடன் இல்லத்தில் திருப்தியானும் மோகன வாழ்வு கிட்டும் முன்னேற்ற வாழ்வும் உண்டு முதியவர் ஆசியுண்டு தாய்வழி தனமும் சேரும்,

கன்னி: எப்பக்கம் திரும்பினாலும் ஆதரவு கொடுப்பதற்கு அன்பர்கள் முன்வருவார்கள் பொதுமக்கள் மத்தியில் நல்ல மதிப்பு ஏற்படலாம் தங்கள் செல்வாக்கில் பிள்ளைகளுக்கும் பெரும்பங்கு இருக்கும்.

துலாம்: ஆமை வேகத்தில் காரியங்கள் நடைபெறும் பகைவர்களின் சூழ்ச்சி பலமாக இருக்கும் காணித் தொல்லையினால் கடன்படநேரிடலாம் குடும்பத்தில் ,இடைக்காலப் பிரிவுக்கும் இடமுண்டு.

விருச்சிகம்: வாழ்க்கை இன்று மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும் குடும்பத்தில் அமைதி நிலவும் களஸ்திர வழியால் நன்மைகள் வந்து சேரும் இன்று நல்லநாள்.

தனு: தொல்லைகள் தலைதூக்கும் தொழில் புரியும் இடத்தில் ஏமாற்றத்துக்கு இடமுண்டு வழக்கு விவகாரங்களில் காலைவாரிவிடலாம் அவசர முடிவைத் தவிர்த்துக் கொள்ளவும்.

மகரம்; அறிஞர்கள் போற்றப்படுவார்கள் சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்புக்கிடைக்கலாம் குருவின் ஆசியும் தாராளமாக கிடைக்கலாம் பிதாவழிச் சுகமுண்டு

கும்பம்: எதிரிகள் மத்தியில் வீறுநடை போடுவீர்கள் தொழில்துறையில் புதிய உற்சாகம் பிறக்கும் எதிரிகள் மத்தியில் மனமாற்றம் உங்கள் செல்வாக்கை வளர்க்கும்.

மீனம்: வருமானத்தில் அபிவிருத்தி காணப்படுகிறது. கடந்த சில நாட்களாக நிலவி வந்த தயக்கநிலையில் இன்று நல்ல திருப்பம் ஏற்படும் பிறந்த இடத்தில் இருந்து அழைப்பிதழ் கிடைக்கலாம்,

சோதிடக்கலாநிதி
திருமலை
கு. வேலுப்பிள்ளை

# சங்கிலியன் அரண்மனையை பார்த்தனர்

(அரியாலை)

நல்லூரிலிருந்து ஆட்சி செய்த கடைசித்தமிழ் மன்னன் சங்கிலியனின் அரண்மனை அமைந்திருந்த இடத்தையும், அதன் வாசலையும், பாதுகாத்து அதன் பழமையையும், பெருமையையும் அழியாது பேணும் நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள முன்வந்துள்ளது.

இதற்கு முன்னோடியாக எதிர்க்கட்சி முதல்வரும், ததுழர் கூட்டணிச் செயலதிபருமான திரு. அ. அமிர்தலிங்கம் தலைமையில், நல்லூர்த் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. மு. சிவசிதம்பரம், யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச்சபைச் செயலாளரும், யாழ். அரசாங்கம் அதிபருமான திரு தேவநேசன் நேசையா ஆகியோர் உட்பட பல அதிகாரிகள் கடந்தசனிக்கிழமை இப்பகுதிக்கு விஜயஞ் செய்து பார்வையிட்டனர்.

# "விடுதலைப்பாதையில் நாம் சரியாகச் செல்கின்றோம்"

-- கோப்பாய் எம், பி.

(கோப்பாய்)

''விளையாட்டும்விழாக்களும் இளைஞர்களது உடலுக்கு வலுவூட்டுவதோடு மாத்திரமல்ல உள்ளத்திற்கும் உறுதியைஅளிக்கின்றன. போட்டி பொறாமை, பூசல்களை தவிர்த்து இளைஞர்களிடையே ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் இத்தகைய விழாக்கள் ஏற்படுத்தவேண்டும். அவ்வாறு ஏற்படுத்தினால் எமது நோக்கு இலட்சியம் வெற்றிபெற ஏதுவாயிருக்கும்,

இவ்வாறு கோப்பாய் எம். பி. திரு. மு. ஆலாலசுந்தரம் கோப்பாய் தெற்கு முழுமதி சனசமூக நிலையத்தின் 4வது ஆண்டு நிறைவு விழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

திரு. வே. சின்னத்துரை தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. ஆலாலசுந்தரம் மேலும் கூறியதாவது;

''சைக்கிளோட்டமாயினும் சரி, மரதனோட்டமாயினும் சரி எந்த விளையாட்டுப்போட்டியிலும் கலந்துகொள்கின்ற ஒருவன் ஆரம்பத்தை விட முடிவைநோக்கியே தீவிர கவனம் செலுத்துவான். அந்த வழியில் எதிர்பார்க்கக் கூடிய பள்ளங்கள், திட்டிகள், முட்கள் பற்றியெல்லாம் அவன் கவனத்திலெடுத்துக் கொண்டு தான் முடிவை நோக்கி முன்னேறுவான். அதே போன்று எமது விடுதலைப் பாதையிலும் நாம் செம்மையாக சரியாக வழிநடந்து செல்வோம்'' என்றார்.

நிலைய ஆண்டு விழாவையொட்டி நடைபெற்ற மரதன் ஓட்டப்போட்டி, சைக்கிளோட்டப்போட்டி, கயிறு இழுத்தல் போட்டி மற்றும் சிறுவர்களது விளையாட்டுப் போட்டிகளுக்கான பரிசில்கள் யாவும் விழாவில் வழங்கப்பட்டன.

கவிஞர் பாசையூர் தேவதாசன் தலைமையில் கவியரங்கொன்று நடைபெற்றது. இதில் கவிஞர்கள் வி. ரி. இளங்கோவன், தேவி பரமலிங்கம், பொ. பொன்ராசா ஆகியோர் கலந்துகொண்டு கவிதை படித்தனர்.

''குற்றவாளிக் கூண்டில் கவிஞர் கண்ணதாசன்'' என்ற பொருளில் சுவையான வழக்காடு மன்ற நிகழ்ச்சியும் இடம்பெற்றது. கவிஞர் கண்ணதாசன் குற்றவாளியென வழக்கைத் தாக்கல் செய்து 'சட்டத்தரணிகள்' டானியல் அன்ரனி, பாசையூர் தேவதாசன் ஆகியோர் பேசினர். கண்ணதாசன் குற்றவாளியல்ல என 'சட்டத்தரணிகள்' க. சிவதாசன், சபா. செந்தில்ராசா ஆகியோர் வாதிட்டார். நீதிபதியாக'யாக திரு. வி. ரி. இளங்கோவன் கடமையாற்றினர்'

# நல்லூர் மீண்டும்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ருர்கள் எமது இளைஞர்களைப் பிளவுபடுத்த தீய சக்திகள் செயல்பட்டுவருகின்றன. இளைஞர்கள் பிளவுகளுக்கு இடங் கொடுக்காமல் ஒன்று பட்டு செயல்பட வேண்டும். இளைஞர்களின் ஒற்றுமையைக் கண்டு அரசாங்கம் கலங்குகிறது, சட்டத்தையும், ஒழுங்கையுல் நிலைநாட்ட வேணடியவர்களின் காடைத்தனத்தால் எமது அறிவுப் பொக்கிஷமாக விளங்கிய நூல் நிலையம் தீக்கிரையாக்கப்பட்டது. இதனை மீண்டும் அமைக்க வேண்டிய பொறுப்பு இந்த நாட்டில் வாழும் தமிழ் மக்களுடையதாகும். இதுவரை நூல் நிலைய நிதிக்கு பன்னிரண்டு லட்சம் ரூபா சேர்ந்திருக்கிறது இதனைப் பூரணமாக்க ஒன்றரைக் கோடி ரூபா தேவையாகும் இதனை உணர்ந்த வெளிநாடுகளான சாம்பியா, ஜேர்மனி, லண்டன் போன்ற நாடுகளில் பணிபுரியும், தமிழ் மக்கள் பெருநிதியைச் சேகரித்து அனுப்பிவைத்துள்ளனர் கடந்த அக்டோபர் மாதத்திற்கு பின்னர் மின்சாரக் கட்டணம் அதிகரித்துள்ளது. எரிபொருளின் விலையேற்றத்தால் அரசாங்கம் மின்சாரக் கட்டணத்தை அதிகரித்துள்ளது. எப்படியாக இருப்பினும், நாம் மின்சாரத்தை கட்டுப்பாடாகப்பாவிக்க வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

யாழ். மாநகர ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் பேசுகையில், ''தமிழ்க்கலாசாரத்தை அடிப்படையாக வைத்து ஆக்கப்படும் நாடகங்கள் கிராமத்தின், நாட்டின் நாடிபிடித்துக் காட்டக்கூடியனவாக அமையவேண்டும். மக்களின் பிரச்னைகளை தத்ரூபமாக எடுத்துக்காட்டக்கூடிய நாடகங்கள் அமைய வேண்டும் இப்படியான நாடகங்களை இவ்வரங்கில் ஏற்று நடிப்பதின் மூலம் மக்களின் அறிவாற்றலை வளர்க்க முடியும்' என்று குறிப்பிட்டார்.

## நடிகனாக இருந்து அரசியல்வாதியாக

கோப்பாய் எம். பி. திரு. எம். ஆலாலசுந்தரம் பேசுகையில், ''அன்று நடிகனாகஇருந்த நான், இன்று அரசியல் வாதியாகவும், சட்டத்தரணியாகவும் பணியாற்றுவதினாலும் இன்று நாடக நடிகனாக அல்ல ரசிகனாக இருக்கிறேன். மக்களுக்கும், கலைஞர்களுக்கும், இவ்வரங்கு மேலும் வளர்ச்சி பெற உதவும்'' என்று குறிப்பிட்டார்.

திரு. கே, சண்முகநாதன்சங்லியன் மன்றத்தின் சேவைகள் குறித்துப்பேசினர். மன்றத்தினால் நடாத்தப்பட்ட மென் பந்துப்போட்டியில் வெற்றி பெற்ற கோஷ்டிகளுக்கு கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. கிட்ணர்பரிசுவழங்கினர். திரு. சந்திரகுமார் நன்றி கூறினர். இதனைத் தொடர்ந்து செல்வி நளாயினி ராசதுரையின் மாணவிகளது பரதநாட்டியம் நடைபெற்றது.

# இலங்கை அணி வெற்றி

[வவனியா]

இலங்கை விளையாட்டுக் கழகத்துக்கும், வன்னிவிளையாட்டுக் கழகத்துக்குமான சிநேகித பூர்வமான உதைபந்தாட்டம் அண்மையில் வவனியா நகர சபை மைதானத்தில் இடம் பெற்றது. இலங்கை அணி ஏழு கோல்களை போட்டு வெற்றியீட்டியுள்ளது. பிரதம அதிதியாக வவனியா பொலிஸ் அத்தியட்சகர் திரு. சி. பி. ஜயசூரியா, அரச அதிபர் திரு. கே. ரி. லோகேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர். திரு எம். பொன்கலன் மத்தியஸ்தராக பணிபுரிந்தார்.

[கு]

# ஈரான் திரும்ப மறுப்பு

லண்டன். ஏப். 26

ஈரானிலிருந்து இரு விமானங்களைச் செலுத்திச் சென்று ஓமானில்இறங்கியஇருவிமானிகளும் ஈரானிற்குத் திரும்பிச் செல்ல மறுத்ததையடுத்து. அவர்கள் விரும்பும் நாட்டுக்கு அவர்களைச் செல்ல அனுமதியளிப்பதென ஓமான் அரசு தெரிவித்துள்ளது. (இ)

# வரி விளம்பரம்

## தேவை

பிடவை வியாபாரம் செய் யக்கூடிய அனுபவம் உள்ள ஆண்கள், பெண்கள் நேரில் வரவும். த. சங்கரப்பிள்ளை பிறதர், இல. 21 மக்கள் நவீனசந்தை, யாழ்ப்பாணம். 2994

யாழ். வண்ணார்பண்ணைச் சுற்றுடலில் வீடு கட்டுவதற் குரிய நிலம் தேவை. வீட்டுட ணுயினும் விரும்பத்தக்கது. தரகர் தேவையில்லை. தொடர்புகொள்ளவேண்டிய முகவரி: கோபாலகிருஷ்ணன், 187, மானிப்பாய் வீதி, யாழ்ப் பாணம். 2963

## விற்பனைக்கு

அராலி வடக்கு, பிரதான வீதியில் யாழ்ப்பாணக் கல் லூரியிலிருந்து 1 மைல் தூரத் தில் வீட்டுடன் 3½ பரப்புக் காணி விற்பனைக்குள்ளது. பஸ்ஸ்ராண்ட்முன்னுல்உண்டு. விபரங்களுக்கு: 18, சப்பல் வீதி, யாழ்ப்பாணம். தொலை பேசி: 620 (2977)

ஜப்பானில் உருவான பய னியர் றேடியோ & ரேப் றெச் கோடர் (2 Way each 45 watts) அம்பிளிபயருடன் விற்பனைக் குண்டு நியாயமான விலைக்கு வாங்க அரிய சந்தர்ப்பம் பார்வைக்கும் தொடர்பு கொள்ளவேண்டியதும் முகவரி: விஜயபாலன், 136/4, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 2987

## வகுப்பு

3-5-82 டெலிவிஷன் வகுப்பு கள் செய்முறைப் பயிற்சி யுடன் ஆரம்பமாகவுள்ளன. விபரங்கட்கு: AUTO COOL ENGINEERS, (சாந்தி சினிமா முன்பாக) கந்தப்ப சேகரம் வீதி, யாழ்ப்பாணம். 2943

## விற்பனைக்கு

அடைவுகடைகளுக்கு ஏற்ற 24 லாச்சி இரும்புப்பெட்டிக ளும், வியாபார ஸ்தலங்க ளுக்கும் வீட்டுப்பாவனைக்கும் ஏற்ற இரும்புப்பெட்டிகளும் எங்களிடம் பெற்றுக்கொள்ள லாம். இரும்புப்பெட்டி தயா ரிப்பாளர்களும், இரும்புப் பெட்டி பழுதுபார்ப்பவர்களும் ''எவர்சில்வர் மாளிகை'', ந. 11, பிறவுண்வீதி, யாழ்ப் பாணம். 2988

திருநெல்வேலி கிழக்கு செங் குந்தா வீதி, யாழ்ப்பாணத் தில் 2¾ பரப்புக் காணியில் உள்ள வீடும் (மேல்வீடு) வள வும் விற்பனைக்குண்டு. விபரங் களுக்கு சி. ஜெகதீஸ்வரன், 'செல்வஸ்தான்', செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். 2991

## விற்பனைக்கு

பூநகரி பல நோக்குக் கூட் டுறவுச் சங்கத்தில் நல்லநிலை யிலுள்ள இயந்திர வள்ள மொன்று (பேர்க்கின்ஸ் பி 3 இயந்திரம்) கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்குண்டு. மீள ளிக்கப்பட்டாத ரூபா 5/- செலுத்தி கேள்விப்பத்திரம் பெற்றுக்கொள்ளலாம். இவ் வள்ளத்தினைச் சங்கத்தின் கேரதீவு இறங்குதுறையில் பார்வையிடலாம். வைப்புப் பணம் ரூபா 100/- செலுத்த வேண்டும். விண்ணப்ப முடிவு திகதி 10-5-1982.

பொதுமுகாமையாளர்
பூநகரி ப. நோ. கூ. சங்கம்,
பூநகரி. 2989

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

# பண்டைய ஆசிரிய...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை என்ற உணர்வின் அடியானவையே. அவ்வகை யான தொடர்புகளை நிறுவ, மாணவர்களின் கல்யாசக்கங் களைப் பொதுமக்கள் முன் கொண்டுவருவதற்கும் பல் கலைக்கழகத்துக்கு வெளியில் நடாத்துவதற்குமாக மேற் கொள்ளப்படும் எத்தகைய ஒழுங்குகளும் எப்போதும் அர்த்தமுள்ளவை என பாராட் டப்பட்ட, புலமைமிகு சஞ்சி கைகளில் வெளியிடப்படும் உயர் ஆராய்ச்சிகள் கவனிக்கப் படாதிருக்கின்றன. அத்த கைய நடவடிக்கைகள் பல்க லைக்கழகத்தவரின் கடமைக ளுள் அடங்காவென அறிவு சால் நிலைப்பாட்டிற் கண்டிப் பாக நின்று ஒருவர் கொள்ள லாம். ஆயின் பல்கலைக்கழகத் தின் கடமைகள் பற்றிய அத் தகைய வரையறைகளை இனி மேலும் ஒருவர் பற்றி நிற்க லாமா?

## அறிவைப் புகட்டுவதின் முக்கியத்துவம்

சமூக ஒழுக்கம் தனிப்பட்ட வர் ஒழுக்கத்தினைப் போலன் றிச் சூழ்நிலை மாற்றங்களுக் குப் பொருந்தியமைய வேண் டும். இன்றைய நிலையிற் பல்க லைக்கழக ஆசிரியர்களின் தலை யாயதும் உடனடியானதுமான கடமை அறிவைப் பரப்புவதே என்றும் தமது புதிய அறிவுத் தேட்டத்தினை விட அதற்கே அவர்கள் முக்கியத்துவம் தர வேண்டும் என்றும் நான் கருது கிறேன். தங்களைச் சூழ்ந்துள்ள இளைஞர்கள் பின்னணி அறிவு குறைந்து போதிய அளவு பயிற்றுவிக்க முடியாநிலையில் நிற்பதைக் காணும் ஆசிரியர் கள், அவ்வகையான அறிவினை எவ்வாருயினும் வழங்கும் ஒழுக்கக்கடப்பாடு தமக்கு உண்டென்பதை எவ்வாறு மறுக்க முடியும்? தங்களுடைய பாடங்களில் அதிகாரபூர்வ மான, ஆயின் ஜனரஞ்சகமான நூல்களை எழுதுவது அதற்கு ஒருவழி. இன்று நூல்களை வெளியிடுவது சிரமமாக இருப் பதால் அத்தகைய முயற்சிக ளுக்குப் பல்கலைக்கழக அதி காரிகள் உற்சாகமும் உதவி யும் வழங்கவேண்டும். அண் மைக்காலங்களிற் சிறப்பு வகையினவான அல்லது பொது வகையினவான நூல்கள் பல் கலைக்கழகங்களிலிருந்து வெளி வந்ததை யாம் கண்டிலேம். சில ஆண்டுகளுக்கு முன் பல் கலைக்கழகங்களில் இருந்த நூல் வெளியீட்டுத் துறைகளும் இன்று செயற்படுவதாய்த் தெரியவில்லை. பல்கலைக்கழக அதிகாரிகள் அவை இன்று வீழ்ந்துள்ள இக்கட்டான நிலை யிலிருந்து பல்கலைக்கழகங்களை விடுவிப்பதற்குத் தம்மை அர்ப் பணிப்பதிலும்பார்க்க அன் றுட நிர்வாக நடவடிக்கைக ளைக் கவனிப்பதிலும் மாணவர் களை ஒழுங்காகக் கட்டுப்ப டுத்தி வைத்திருப்பதிலும் திருப்தி காண்பதாய்த் தெரிகி றது என்பதை நான் கவலையு டன் தெரிவித்துக் கொள்கின் றேன்.

(முற்றும்)

## டிலிவரி பையன்கள் தேவை

யாழ். நகரிலுள்ள பத்திரிகைக் காரியாலய மொன்றுக்கு, காங்கேசன்துறை, சாவகச்சேரி, மற்றும் இடங்களுக்குத் தினமும் காலையில் காரி யாலயத்திலிருந்து பத்திரிகைகளை எடுத்து விநி யோகிப்பதற்கு பையன்கள் தேவை. சைக்கிள் வைத்திருப்பவர் மட்டும் விண்ணப்பிக்கவும்.
விண்ணப்ப முடிவு திகதி 29-04-82.
விளம்பர இல. 2990, மே/பா. ஈழநாடு,
யாழ்ப்பாணம். 2990

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற யாழ்ப்பா ணம் சிறும்பியடி ஒழுங் கையில் வசித்தவரான ஸாபிர் ஹுஸேன் ஸர பாலி என்பவரின் மரண சாதனமற்ற மரணச் சொத்தின் விடயத்தில்

— மரணமெய்தியவர்

திருமதி. ஸால்மா பாய் ஸரபாலி, இல. 30, சிறும் பியடி ஒழுங்கை, யாழ்ப் பாணம்.

— மனுதார்

மரணச்சொத்து)
நியாயாதிக்கம் ) இல. 3403

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணச்சொத்து வழக்கு மேலே பெயர் குறிப் பிடப்பட்ட இறந்துபோனவ ரின் மரணச்சொத்தை நிருவ கிப்பதற்காக மேற்படி நீதி மன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின் னுறுதிக்கட்டளை பதியப்பட் டுள்ளதென இத்தால் அறி விக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1981ம் ஆண்டு ஐப்பசி மாதம் 23ம் திகதியன்று முற்பகல் 9-00 மணிக்கு இந் நீதிமன் றத்தில் தோற்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட் டளை ஏன் முற்றுனதாக்கப் படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறுஇத்தால் தேவைப்படுத்தப்படுகின்றுர்.

1982ம் ஆண்டு ஏப்ரல் மாதம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி
தா. குலஞானம்.
பதிவாளர்

5-3-82 காரணம் சாட்டும் திகதி 30-4-82க்கு நீடிக்கப் பட்டது.

தா. குலஞானம்.
பதிவாளர்

தயாரித்தது
த. சண்முகராஜா.
மனுதாரின் சட்டத்தரணி.
2995

எய்ற்கென் ஸ்பென்ஸ் அன்ட்
கம்பெனி லிமிட்டெட்
ஸ்தாபனத்தார் தமது
தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபன
பிரதம ஏஜன்சி அலுவலகத்தை
190, ஆஸ்பத்திரி வீதி,
(ஒட்டோஸ் லிமிட்டெட்)
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 496
கட்டடத்திற்கு மாற்றியுள்ளனரென்பதை
மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றனர்.
2981

தங்க நகைகளுக்கும்
தங்க கட்டிகளுக்குமான
பணவசதி

த பினன்ஸ் கம்பனி
வழங்கும் மற்றுமொரு புதிய திட்டமாக
தங்க நகைகளுக்கும்,
தங்க கட்டிகளுக்குமான
பணவசதி
வழங்க முன்வந்துள்ளது. உங்களுக்கு பண நெருக்கடி ஏற்படும்போது, எம்முடன் கலந்தாலோசித்து, தவணை முறையிலோ, குறிப்பிட்ட கால எல்லையிலோ, பணத்தைச் செலுத்தி உங்கள் தங்க நகைகளையோ அல்லது பவுண் கட்டிகளையோ பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு:
விற்பனை முகாமையாளர்,
த பினன்ஸ்
கம்பனி லிமிட்.
249, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 7680

குழாய்க் கிணறுகள்
GET YOUR ADVICE FROM GETS!

விஞ்ஞான ரீதியில் கிணற்று நிலையம் அமைத்துக் கொள்வதனுல் நன்நீர்க் கிணற்றையும், வற்றுத, தேவைக்கேற்றவாறு நிலநீரைப் பெறும் விதத்தில் உங்கள் கிணற்றை அமைத்துக்கொள்ளமுடியும்! உங்கள் காணியில் நன்நீர் இருக்கும் இடத்தையும், கற்பாறைகளின் தன்மையையும், உவர் நீரின் தன் மையையும் அறிந்து கிணற்றை அமைத்துக்கொள் வதனுல், பல ஆண்டுகாலம் உங்கள் கிணறுகளை உவரடையாது பாதுகாத்துக்கொள்ளமுடியும்.

இடவசதியற்றோர் தம் வீட்டுத் தேவைக்கும், விவ சாயத் தேவைகட்கும் வேண்டிய நீரை விஞ்ஞான ஆராய்ச்சிக்கேற்ப இயந்திரத்தினுல், இரண்டு நாட் களில் ரூபா 6000/- செலவில் அமைக்கப்படும் குழாய்க் கிணற்றின் மூலம் பெற்றுக்கொள்ளமுடியும்.

யாழ்ப்பாணம், மன்னர், வவுனியா மாவட்டங்க ளில் பல குழாய்க்கிணறுகளையும், நிலையங்களையும் அமைத்துள்ள பல வருட அனுபவமுள்ள நிலநீர் நிபுணர்/பொறியியலாளரின் சேவையை நாடி உங்கள் நீர்ப்பிரச்சனைகளை நிவர்த்திசெய்யவும்.

தொடர்பு:-
GLOBAL ENGINEERING
TECHNOLOGY SERVICES
குலோபல் இன்ஜினியரிங்
டெக்னோலொஜி சேவிசஸ்
32, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 7667. 2992

# தந்தை செல்வா...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. எட்வட், திரு. சண்முகராசா, திரு. கு. நேசையா ஆகியோரும் வந்திருந்தனர்.

சரியாக 5–30 மணிக்கு திரு. அ. அமிர்தலிங்கமும், மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்தவர்களும் தந்தை செல்வா நினைவாலயசமாதிக்கு சென்று மலர்தூவி அஞ்சலி செலுத்தியபின்னர் நினைவாலயத்திற்கு அருகிலுள்ள நிலத்தில் அமர்ந்துகொண்டனர். சுமார் 6 மணிவரை மௌன அஞ்சலி செலுத்தினுர்கள்.

இதே சமயம் 30 அடிக்கு அப்பாலிருந்த தமிழ் ஈழ விடுதலை அணியினர் சரியாக 6 மணிக்கு, கோவை மகேசன் ஐ.நா. சபையின் முன்பிரகடனம்செய்யப்பட்ட 'தமிழ் ஈழ பிரகடனத்தை தமிழில் படிக்க ஆரம்பித்தார். அச்சமயம் வீதியில் நின்றவர்கள் சமாதி மதிலுக்கு அருகில் வந்து திரண்டனர்.

சரியாக 6.05 மணிக்கு தமிழர் விடுதலைக்கூட்டணியினர் எழுந்து நிற்க திருமதி மங்கையர்க்கரசிஅமிர்தலிங்கம் தமிழ் தேசிய கீதமான ''வாழ்க ஈழத்தமிழகம்'' என்ற பாடலைப்பாடிக் கொண்டிருந்தார். அதே சமயம், கோவை மகேசன், 30 அடிக்கு அப்பால், தமிழ் ஈழப்பிரகடனத்தைப் படித்துக்கொண்டிருந்தார்.

தமிழ் ஈழப்பிரகடனத்தை படித்தபின்னர் அதனை ஏற்றுக் கொள்வதாகக்கூறி டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கம் அதில் கையெழுத்திட்டார். இதனைத் தொடர்ந்து தமிழ்ஈழ விடுதலை அணியினரும், அதன் கீழ் கையொப்பமிட்டனர்

தமிழர் விடுதலைக் கூட்டணியினர், திரு. கு. நேசையா தலைமையில் அஞ்சலிஉரை நிகழ்த்த ஆரம்பித்தனர்.

பண்டிதர் க. பொ. இரத்தினம் முதலில் உரையை ஆரம்பித்து சுமார் 10 நிமிடம்வரை பேசினுர். இதனைத் தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் சுமார் 20 நிமிடங்கள் உரை நிகழ்த்தினுர். சரியாக 6–40 மணிக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் அஞ்சலி உரைகள் முடிவடைந்ததும் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கத்தின் பாடலுடன் நிறைவு பெற்றது.

இதன்பின்னரும் தமிழ்ஈழ விடுதலையணியினர்கருத்தரங்கு இரவு 7 மணிவரை தொடர்ந்து நடைபெற்றது.

திரு. அமிர்தலிங்கம் பேசிக்கொண்டிருந்த அதே சமயத்தில் 30 அடிக்கு அப்பால் நடந்த தமிழீழ விடுதலை அணியின் கருத்தரங்கில் ஈழவேந்தன், கோவை மகேசன் டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கம், திரு. இராசநாயகம் ஆகியோர் பேசிக்கொண்டிருந்தனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் அஞ்சலி உரைமுடிந்த பின்னர், தொடர்ந்து நடந்த தமிழ் ஈழ விடுதலை அணியின் கருத்தரங்கில் திரு.தேவதாஸ், பொன். பூலோகசிங்கம் ஆகியோர் உரைநிகழ்த்தினுர்கள்.

30 அடி இடைவெளியில் இரு அணியினரதும் பேச்சுக்கள் இடம்பெற்றதால் ஒருவர் பேச்சை மற்றவர் எவ்வித கஷ்டமுமில்லாமல் கேட்க முடிந்தது. இதனுல், சில பேச்சுக்களுக்கு உடனுக்குடன் பதிலும் கிடைத்தது. பதில் சொல்லப்பட்ட நேரங்களில், ஒவ்வொரு பக்கத்திலும் நின்ற ஆதரவாளர்கள் பலத்த கரகோஷம் செய்தனர்.

தந்தை செல்வா நினைவாலய முன் வீதியில் மக்கள் திரண்டிருந்தபோதிலும், பொலிசார் அப்பகுதியில் காணப்படவில்லை.

தமிழர் விடுதலைக் கூட்டணியினரும், அஞ்சலி செலுத்த வந்திருப்பதாகக் கேள்வியுற்றதும் பஸ் நிலையத்திலிருந்தும பலர் அங்கு ஓடோடி வந்தார்கள். சிலர் இரு பகுதியினரின் உரைகளையும் மாறி மாறிக் கேட்டுக்கொண்டிருந்தனர். [க]

## கல்விச்....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வரவேண்டும் என்பதே எனது விருப்பமாகும். இக் கல்லூரியிலே புதிதாக பல தொழில் நுட்பப் பிரிவுகள் செயல்பட்டு வருவதை நான் கண்டு பெருமிதம் அடைந்தேன்.

இவற்றின் மூலமாக நல்ல பயன் பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் வாழ்வும் வளமும் உங்கள் கைகளிலேதான் உண்டு என்ருர்.

கல்லூரி ஸ்தாபகர் நினைவு உரையை வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு. க. சிவநாநதன் நிகழ்த்தினுர்.

பரிசில்களை திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம வழங்கினுர். மாணவத் தலைவர் செல்வன் செ. செல்வவேல் நன்றியுரை கூறினுர்.

கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. (வெ)

## கூட்டணி செய்தி ஏடு

[சுழிபுரம்]

தமிழர் விடுதலைக் கூட்டணியின் ''உதய சூரியன்'' பத்திரிகைக்குப்பதிலாக ''செங்கதிர்'' என்னும் புதிய பேருடன் வார இதழ் மே மாதம் முதல் வெளிவரவுள்ளது என்று தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகமும் எதிர்க்கட்சி முதல்வருமான திரு. அ. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

செய்திகளைவேண்டுமென்றே திரித்து சில பத்திரிகைகள் வெளியிடுவதாகவும் அவைகளுக்கு உடனடியாகப் பதில் கொடுக்கவேண்டியது அவசியமாகிறதென்றும் அவர் தெரிவித்தார்.

## தமிழினத்தை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வாய்ப்பேச்சால் முடியாது. தடுத்து நிறுத்தும் பலம் எம்மிடமில்லை. அதனை எமது ஒற்றுமையால்தான் தடுத்து நிறுத்தமுடியும்.

''சிலர் இம்மாதம் 29ம்திகதி ஹர்த்தால் நடாத்த வேண்டுமெனப் பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளனர். இவர்கள் ஹர்த்தால் என்ற புனிதமான சொல்லை, மலிவான பொருளாக்கி, செல்லாக் காசாக்கியுள்ளனர். தந்தை செல்வா இந்த மண்ணில் தமிழினத்திற்கு நேர்ந்த பயங்கரத்தை உணர்ந்து 1956ல் தமிழ்ப்பிரதேசம்எங்கும்ஹர்த்தாலை ஏற்படுத்தினுர். அதேபோல் 1952ல் பங்கீட்டுஅரிசி, மானியத்தை டட்லி அரசாங்கம் வெட்டியபோது நாடுமுழுவதும் ஹர்த்தால் நடைபெற்றது. இன்று கோட்டேயில் அமர்ந்திருக்கும் பாராளுமன்றத்துக்கு நாம் செல்வதை எதிர்த்து ஹர்த்தால் நடாக்த வேண்டுமென துண்டுப் பிரசுரம் வெளியிட்டிருப்பதை எண்ணும்போது ஹர்த்தால் கேலிப்பொருளாக ஆக்கியிருக்கின்றனர் என்றே சொல்லத்தோன்றுகிறது. எம்மைப் பொறுத்த வரையில் பாராளுமன்றம் கோட்டேயில் அமைந்தால் என்ன, காலிமுகத்திடலில் அமைந்தால் என்ன, நாம் பாராளுமன்றத்துக்குச்சென்றுதான் ஆகவேண்டும்.

'அரசியல் சதுரங்கம் ஆட எமது மக்கள் தயாரில்லை. ஏகோபித்த சில திட்டங்களின் அடிப்படையில்தான் விடுதலைக் கூட்டணி எதைச்செய்யவேண்டுமெனத் தீர்மானிக்கமுடியும். அந்த வகையில்கூட்டணிஉறுப்பினர்கள் எடுத்த முடிவிற்கமைய நாம் புதிய பாராளுமன்றம் செல்வோமென இன்றையதினத்தில் உறுதியெடுப்போம்.

''தந்தை செல்வா கடைசியாக 1977ல் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தினுர். இதனைத் தந்தையின் பெயரைச் சொல்லி ஒற்றுமையைக் குலைக்கும் சக்திகள் மறைக்கப்பார்க்கின்றனர். தந்தை கடைசியாக 1977ம் ஆண்டு மார்ச் மாதம் 19ந் திகதி செனட் சதுக்கத்திலுள்ள பிரதமரின் இல்லத்தில் பேச்சுவார்த்தை நடத்தினுர். பேச்சுவார்த்தையின் போது, பண்டா — செல்வா ஒப்பந்தம் நிறைவு, தரப்படுத்தலை நீக்குதல், சிங்களக் குடியேற்றத்தை நிறுத்துதல் போன்ற கொள்கையின் அடிப்படையிலே பேச்சுவார்த்தை நடத்தினுர். பின்னர், தெல்லிப்பழையிலுள்ள இல்லத்திற்குச் சென்றபோது நோய்வாய்ப்பட்டு சிலநாட்களின் பின்னர் மறைந்தார். இதுதான் அவரது கடைசி அரசியல் நடவடிக்கை.

இன்று நடைபெற்ற கேவலத்திற்கு நாங்கள் இடம் கொடுக்கமுடியாது. வருங் காலத்தில் இப்படியான நிகழ்வு நடைபெருமல் இருக்க ஏற்ற நடவடிக்கை எடுப்போம்'' (கெ–அ)

WORLD HINDU CONFERENCE
அகில உலக இந்து மாநாடு

அகில உலக இந்து மகாநாட்டுப் பேராளர்களை
வருக! வருக!
என்று அன்புடன் வரவேற்கின்றோம்.
மில் வைற்
சவர்க்காரத் தொழிலகம்
யாழ்ப்பாணம். 2998

## இப்படியும் நடக்கிறது

கொழும்பிலுள்ள இறக்குமதித் தீர்வையற்ற வர்த்தக நிலையங்கள் (Duty Free Shops) நிரம்பிவழிகின்றன!

கடந்த வாரம் இவ் வர்த்தகநிலையங்களில் வியாபாரம் உச்சக்கட்டத்தில் 'ஓகோ' என்று நடைபெற்றது

அதிகமாகக் காணப்பட்டவர்கள் இந்தியர்கள்தான்.

மகாநாட்டுச் சாட்டோடு வந்து, மகாநாட்டுப்பக்கமே தலைகாட்டாத பலரும் கூட அவசரம் அவசரமாகக் கொழும்பு வந்து, இறக்குமதித்தீர்வையற்ற வர்த்தக நிலையங்களுக்குச் சென்று கைநிறைய வாங்கிக்கொண்டு ஓரிருநாட்களிலேயே தாயகம் புறப்பட்டுவிட்டனராம்!

'ஊடுருவி'

## நாட்டிய கலாநிதிக்கு கிடைத்த அனுபவம்

(கண்டி)

அகில உலக இந்து மாநாட்டில் நாட்டிய விருந்தளிக்க இலங்கை வந்திருந்த நாட்டிய கலாநிதி செல்வி பத்மா சுப்பிரமணியத்தின் ஒப்பனைப் பொருட்கள் பேராதனை பல்கலைக்கழகத்தில் காணுமற் போய்விட்டன.

பேராதனை பல்கலைக்கழக பொறியியல்பீட மண்டபத்தில் செல்வி பத்மா சுப்பிரமணியத்தின் நடன விருந்து நடைபெற்றது.

நடனம் முடிந்து, அவர் ஒப்பனை அறைக்குத் திரும்பியதும் அவரது பெறுமதி மிக்க ஒப்பனைப் பொருட்கள் ஒன்றுமே அங்கு இருக்காதுகண்டு திகைப்படைந்தார்.

இதனுடன் இவரது உதவியாளரின் கைப்பையும் திருடப்பட்டிருந்தது. இக்கைப்பைக்குள் ரொக்கப்பணம் அடையாள அட்டை மற்றும் முக்கிய தஸ்தாவேஜுகள் இருந்தனவாம்.

செல்வி பத்மா சுப்பிரமணியம் நேற்று முன்தினம் சென்னை திரும்பினுர்.

# கத்திக்குத்துக்கு வயோதிபமாது பலி

## சந்தேக நபர் கைது

(வவனியா)

இருவருக்கிடையே ஏற்பட்ட வாக்குவாதத்தினைதீர்ப்பதற்கு சென்ற வயோதிப மாது கத்திக் குத்துக்குப் பலியானுர்.

இச்சம்பவம் பன்றிக்கெய்த குளம் என்னும் இடத்தில் கடந்த சனிக்கிழமை இரவு நடந்துள்ளது.

பன்றிக்கெய்த குளத்தில் கூலித்தொழில் செய்யும் பி. குணரட்ணம் என்பவருக்கு, அழகன் மாடாசாமி அல்லது அப்துல் றகீம் என்பவருக்குமிடையே பணக்கொடுப்பனவு காரணமாக சம்பவதினம் இரவு வாக்குவாதம் ஏற்பட்டதாகவும் கே. சிவனு என்பவரும அவருடைய மனைவி மாரியாயியும் வாக்குவாதம் நடைபெற்ற இடத்துக்குப் பிரச்னையை தீர்ப்பதற்காக சென்றதாகவும் இச்சம்பவம் பற்றிக் கூறப்படுகிறது.

அச்சமயத்தில் சந்தேக நபரான மாடாசாமி இடுப்பில் வைத்திருந்த கத்தியால் சிவனுவை தள்ளிவிழுத்திவிட்டு மாரியாயின் வயிற்றில் குத்தியதாகவும் பொலிஸ் விசாரணையின்போது தெரிய வந்துள்ளது.

கத்தியால் குத்தப்பட்டவர் உடனடியாக வவனியா அரசினர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு மரணமானுர்.

இவரது மரணம் தொடர்பாக நேற்று மரணவிசாரணை வவனியா பதில் மாவட்ட நீதிபதி ஆர். வி. வில்வராசா முன்னிலையில் நடைபெற்றது.

பிரேத பரிசோதனையை வவனியா மாவட்ட உதவி வைத்திய அதிகாரி டாக்டர் வி.சிறில் இராசேஸ்வரன் மேற்கொண்டார்.

சந்தேகத்தின் பேரில் பொலிசார் மாடாசாமியைக் கைது செய்துள்ளனர்.

பொலிஸ் அதிகாரி பியசேன பெரேரா, சார்ஜன்ட் ரி. பி. ஹுசைன்ஆகியோர் விசாரணைகளை மேற்கொண்டனர்.

மரண விசாரணை அதிகாரி இறுதியில் கொலை எனத் தீர்ப்பளித்தார். [க]

## இன்று இலங்கை மன்ற கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

''இலங்கை சிறப்பாதாரமாக கிராமசமுதாய அபிவிருத்திக்கான உபாயங்கள்'' என்னும் பொருள் பற்றிய கருத்தரங்கொன்றை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்றுறையும், இலங்கை மன்றக்கல்லூரியும் இணைந்து இலங்கை மன்றக் கல்லூரியில் நடாத்துகிறன.

இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள கருத்தரங்கில் '' சமுதாய அபிவிருத்தியில் தனிநபரின் பங்கு'' என்னும் பொருளபற்றி கலாநிதி ஏ. ரி. ஆரியரத்ன விரிவுரையாற்றுவார்

இக்கருத்தரங்கில் மார்க்கா நிலையத்தின் சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர் திரு. சி. வி. இராஜசுந்தரம், பேராதனைப்பல்கலைக்கழக சிரேஷ்ட பொறியியற் பீட விரிவுரையாளர் திரு. என். சண்முகநாயகம், யாழ். பல்கலைக்கழகத்தின் புவியியல் பேராசிரியர் பி. பாலசுந்தரம்பிள்ளை ஆகியோரும் உரையாற்றவுள்ளனர்

இக்கருத்தரங்கில் இடம் பெறும் விரிவுரைகளின் பின்னர் அது பற்றுய கலந்துரையாடலும் இடம்பெறும்.

## சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

பிரபல ஆங்கில நடிகர் பிரியன்டி பார்ன்ஸ் இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் ''டிக்கன்ஸ் லண்டன்'' என்ற தலைப்பில் விவரணச் சொற்பொழிவொன்றை நிகழ்த்துகின்ருர். பேராசிரியர் கைலாசபதியின் தலைமையில் இந்நிகழ்ச்சி இடம் பெறும்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1982 ஆம் ஏப்ரல் மீ 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a Zews Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/81. Eelanadu—P. O. Box 49, Telegram: 'Eelanadu' T'phone: 389 and 8126.